
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு13 தொகுதி 1 ஜனவரி - மார்ச் 2024


**R 5530**

## தேசங்களின் நியாயத்தீர்ப்பு

## JUDGEMENT OF THE NATIONS

**ஆதார வசனங்கள் : மத்தேயு 25 : 31–46**

**திறவுகோல் வசனம் : "மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்" – மத்தேயு 25:45.**

இராஜ்ய வகுப்பாராகிய சபையினுடைய அனுபவங்கள் பற்றியும், அவர்களுடைய வளர்ச்சி பற்றியும், இராஜ்யத்தின் மகிமைக்கு அவர்களைத் தயார்செய்ய வேண்டியும், தம்முடைய சீஷர்களுக்கு அநேக உவமைகளைக் கொடுத்திருந்த அதே நேரத்தில், இயேசுவானவர் இராஜ்யம் ஸ்தாபனமானபின்பு, அதினுடைய நோக்கத்தையும், உலக மனுக்குலத்தின்மேல் அது ஏற்படுத்தும் விளைவையும் விளக்குவதற்கான உவமையினையும் இந்தப் பாடத்தில் கொடுக்க வேண்டுமென்பது மிகவும் முக்கியத்துவமானதும், பொருத்தமானதுமாயிருக்கும்.

கடந்த காலத்தில் நம்மில் அநேகர் வேதாகமத்தை மிகவும் கவனக்குறைவாகப் படித்திருக்கிறோம். ஆவிக்குரிய விஷயங்களில் நம்முடைய மனம் மந்தமாக இருந்தது. உதாரணமாக, இன்றைய பாடம் ஒரு காலத்தில் சபைக்கு பொருத்திக் காண்பிக்கப்பட்டது. ஆனால் அது முற்றிலும் உலகத்திற்கும் தேசங்களுக்கும், புறஜாதி ஜனங்களுக்கும் பொருந்தும் என்பதையும், சபையைக் குறித்த எந்த ஒரு வார்த்தையும் பேசப்படவில்லை என்பதை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம். யூதர்கள் தாங்களே தேவனுடைய தேசம் மற்றும் தேவனுடைய ஜனங்கள் என்று எண்ணுவதை பல நூற்றாண்டுகளாக வழக்கமாகக் கொண்டிருந்தனர். மற்ற அனைவரும் புறஜாதிகள், புறஜாதி ஜனங்கள், தேசங்கள் என எண்ணுகின்றனர். இதேபோன்ற நிலைப்பாட்டிலேயே தீர்க்கதரிசனங்களில் தேவன் நடத்தினார். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தெய்வீக ஆதரவைப்பெற்று, இராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்தஜாதியாயும், விசித்திரமான ஜனமாயும் ஆகும்போது, மற்ற மனுக்குலத்தார் அனைவரும் புறஜாதிதேசங்கள் என விவரிக்கப்படும் சிந்தையானது முறையாகவே போதுமானதாக இருக்கிறது.

இதற்கு இணங்க, இந்த உவமையில் நம்முடைய கர்த்தர் அவருடைய இராஜ்யம் ஸ்தாபனமானபிறகு என்ன நடக்கும் என்று கூறுகிறார். அதாவது, உண்மை சபை வகுப்பார் மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக மற்றும் அவருடைய சிங்காசனத்தில் இராஜ்யத்தின் உடன் சுதந்திரராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு என்ன நடக்கும் என கூறுகிறார். "மனுஷகுமாரன் தம்முடைய மகிமையில் பரிசுத்த தூதர்களோடுகூடவரும்போது, தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருப்பார்" என நம்முடைய எஜமான் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளதை நாம் கவனத்தில் கொள்வோமாக. சரியாக பரிசீலனை செய்தபிறகு, இவ்விஷயமானது கடந்த காலத்துக்குரியது என யார் கூறுவார்கள்? அவருடைய இரண்டாம் வருகையின் பரோஷியா மற்றும் எபிப்பானியாவிற்குப் பிறகு, இது மேசியாவின் இராஜ்யத்திற்கான விளக்கம் என்பதை யார் மறுப்பார்கள்?

### இந்த உவமையைப் பொருத்திப் பார்த்தல்

இவைகளுக்குப்பின்பு, ஆயிரமாண்டு அரசாட்சியின் வேலையைப்பற்றிய விளக்கவுரை தொடர்கிறது. "சகல தேசங்களும் அவருக்கு முன்பாக கூட்டி சேர்க்கப்படும்". இது உலகின் எல்லா ஜனங்களும் தேவனுடைய பரிசுத்த ஜாதிக்கும், விசித்திர ஜனங்களுக்கும், அதாவது சபைக்கும் வெளியே இருப்பார்கள் என்பதை அர்த்தப்படுத்துகிறது. சபையைத் தவிர, மற்ற அனைவரும் நீதியும் இரக்கமும் அன்பும் நிறைந்த மாபெரும் வெள்ளை சிங்காசனத்தின் முன்பாக நிற்பார்கள். அதுவே அவர்களின் நியாயத்தீர்ப்பின் காலமாக இருக்கும்.

## இம்மாத வெளியீட்டில்


.. **தேசங்களின் நியாயத்தீர்ப்பு** ... *1*

.. **அபிஷேகம் செய்யப்பட்டோரே பிரசங்கிக்க...** ... *5*

.. ***இரட்சிப்பின் பாத்திரத்தின் ஆசீர்வாதம்*** ... *10*

.. ***தேவனுடைய ஞானமும் இரக்கமும்*** ... *15*



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

ஆறாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு, ஆதாமும் அவருடைய முழு சந்ததியும் ஏதேனில் நியாயந் தீர்க்கப்பட்டபோது, மரணம் அதன் தண்டனையாயிருந்தது. அந்த சந்ததியில் ஒருவரும் நித்திய ஜீவனுக்கு தகுதியானவர்கள் அல்ல. அவர்கள் அனைவரும் பாவிகளாக இருக்கிறார்கள். ''மனுஷனால் மரணம் உண்டானபடியினால்(முழு மனுக்குலத்திற்கும்), மனுஷனால்(இயேசுவினால்) மரித்தோரின் முழு மனுக்குலத்தின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று'' என்ற வார்த்தைக்கு இசைவாக, ஏற்ற சமயத்தில் ஆதாமின் பாவத்திற்காக மரிக்கவேண்டி, தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' ''அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்''– 1கொரிந் 15:21,22.

வரிசைப்படி, முதலாவதாக கிறிஸ்துவுக்குள் உயிரடைவது யாரெனில், உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட, பரிசுத்தஆவியினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட சபையே. இவர்கள் தற்காலத்திலேயே நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற நியாயத்தீர்ப்பை, தங்கள் சோதனையைக் கடந்து செல்கின்றனர். இதனால் தேவனுக்கு பிரியமானதும், தேவனால் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான குணநலன்களை உருவாக்கின தகுதியுடையோர், மேசியாவின் மணவாட்டி வகுப்பாராக, உடன்சுதந்திரராக, அவருடன் இராஜ்யத்தில் உலகை நியாயந்தீர்க்கும் அவருடைய பணியில் முற்றிலும் ஆயத்தமாக இருப்பார்கள். உண்மையுள்ளவர்கள் தம்முடைய சிங்காசனத்தில் தம்மோடுகூட உட்காருவார்கள் என அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நம்முடைய ஆதார வசனங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள சிங்காசனம் இதுவே. சபைக்கு வெளியே உள்ள அனைத்து தேசங்களும் கூட்டிச்சேர்க்கப்பட்டு, அதற்கு முன்பாக நிற்கும் சிங்காசனமும் இதுவே.

உலகத்தினை கூட்டிச்சேர்த்தல் என்பது அறிவின் விளைவாக இருக்கும். உபத்திரவக் காலமானது இவ்வுலகை மிகப்பெரிய வெளிச்சத்துக்குள்ளாக வழிநடத்தும். இச்சமயத்தில் அனைத்து குருடருடைய கண்களும் திறக்கப்பட்டு, செவிடரின் காதுகள் அனைத்தும் திறவுண்டு, பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். அந்த அறிவை எதிர்க்கின்ற சிலர், கிறிஸ்துவை ஏற்க மறுத்து, இந்த நியாயத்தீர்ப்புக்குள் வரமாட்டார்கள். ஆனால் 100 வருட எதிர்ப்புக்குப் பின், இவர்கள் அழிக்கப்படுவார்கள்.

இந்த உவமையில் வருகிறவர்கள், கிறிஸ்துவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டவர்களாகவும், நியாயத்தீர்ப்பு அல்லது நித்தியஜீவனுக்கான பரிசோதனைகளுக்கு விருப்பம் உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். இது கல்லறையில் உள்ள அனைவரையும் உள்ளடக்கினதாயிருந்து, அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுப்பப்படாமல், படிப்படியாக எழுப்பப்படுவர் என இவர்களைக் குறித்து எஜமான் நமக்குக் கூறுகிறார். விருப்பமுள்ளவர்களையும், கீழ்ப்படிகிறவர்களையும் ஊக்கப்படுத்தி, உதவிகள் செய்து, தூக்கி நிறுத்தும் கண்ணோட்டத்தில் மேசியாவின் அரசாட்சியானது தம்முடைய வல்லமையைப் பிரயோகித்து, தேவனை அறிகிற அறிவையும், நீதியையும் கற்பிக்கும். அவ்விதமானவர்கள் பாவத்திலிருந்தும் மரணநிலையிலிருந்தும் விடுபட்டு, மேலும் மேலும் எழும்புவார்கள். மனதிலும் சரீரத்திலும் உள்ள அபூரணத்திலிருந்தும் ஒழுக்கமற்ற நடத்தையிலிருந்தும் ஆதாம் ஆதியில் பெற்றிருந்த சாயலுக்கொப்பான தேவ சாயலுக்கு எழுவார்கள்.

இது முழு ஆயிரமாண்டு யுகத்தின் வேலையாக இருக்கும். இப்போது பாவம் ஆட்சிசெய்வதுபோன்று, அப்போது நீதி ஆட்சிசெய்யும். அதாவது இராஜ்யம் வரவர, பாவம் கட்டுப்பாட்டிற்குள் வரும். நீதி மேலோங்கும், அப்போது யாரெல்லாம் பாவம் செய்கிறார்களோ, அவர்கள் உடனடியாக துன்பப்படுவர். எனவே எல்லா தேசங்களும் பாவத்தைத் தவிர்க்கும். பின்பு உலகமானது பொதுவாக ஒரு மேம்பட்ட ஸ்தலமாக இருக்கும். அங்கு ''தீங்கு செய்வாருமில்லை, கேடுசெய்வாருமில்லை'' ; ''வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை'' சாபமானது படிப்படியாக புரட்டிப்போடப்பட்டு, அங்கு இனிமேலும் கவலையில்லை, மரணமுமில்லை. தேவனுடைய ஆசீர்வாதமானது எங்கும் பரிபூரணத்தைக் கொண்டுவரும். ''ஓ! மகிழ்ச்சியான நாள்!'' என நாம் ஆச்சரியமடைகிறோம். உறுதியாகவே அப்படித்தான் இருக்கும். ஆயிரமாண்டுகள் முழுவதும் அதில் வாழ்கிறவர்கள், மாபெரும் ஆசீர்வாதத்தை பெற்றவர்களாக இருப்பார்கள்.

**தண்டிக்கும் பிரமாணம் செயல்படுகிறது**

ஆனால் இவ்வுலகின் பாவங்கள் என்னவாயிற்று? அவைகளுக்கு எந்தவொரு சிட்சைகளோ அல்லது தண்டனைகளோ இருப்பதில்லையா? என சிலர் வினவுகின்றனர். கிறிஸ்துவினிமித்தம் சபையின் பாவங்களை மன்னிப்பது அவருக்கு நீதியாக இருப்பதுபோல, சரிசமமாக உலகின் பாவங்களை மன்னிப்பதும் அவருக்கு நீதியாயிருக்கிறது என நாம் பதிலுரைக்கிறோம். ஒன்று நீதி நியாயமாக இருக்கும் பட்சத்தில், மற்றொன்றும் அவ்வாறே இருக்கும். தேவன் மனிதர்களை பெரிதாக எண்ணாமல். சபையினுடைய பாவங்களை மன்னிக்க மனதாய் இருப்பதுபோலவே, அதற்கு இணையாக உலகத்தின் பாவங்களையும் மன்னிக்க சித்தமாயிருக்கிறார். எப்போதெனில், உலகமானது பாவத்திலிருந்து விலகி, மனந்திரும்பி, கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ளும்போதே அப்படியாகும்.

இருந்தபோதிலும் நீதி புறக்கணிக்கப்படுகிறது என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. சபையின் விஷயத்தில், இளமைப்பருவத்தின் பாவங்கள் எவ்வாறு அதன் வடுவைக் கொடுத்து, வாழ்க்கையின் இறுதிவரை குத்திக் கொண்டேயிருக்கும் என்பதை கவனியுங்கள். அதுபோலவே,

சில தழும்புகள் அல்லது தண்டனைகள் உலகை பின்தொடரும்படி அதேவிதமாக அனுமதிக்கப்படும் என்று நாம் நியாயமாகக் கருதலாம். கிறிஸ்துவின் ஆசீர்வாதமான 1000 ஆண்டு இராஜ்யத்தில் இந்த பலவீனங்கள் மற்றும் பண்புக்குறைபாடுகளிலிருந்து, இவர்கள் படிப்படியாக பரிபூரணத்துக்கு உயர்த்தப்படுவார்கள். அந்தக் காலகட்டத்தில் சாத்தான் யாரொருவரையும் வஞ்சிக்க அனுமதிக்கப்படாமல் கட்டப்பட்டிருப்பான்.

ஆனால் இருதயத்தின் நிலை பற்றி என்ன? வெளிப்புறமாக தெய்வீகச் சட்டத்திற்கு இணங்கும்போது, அனைவருக்கும் ஆசீர்வாதங்களைத் தரும் என்றால், ஜனங்களில் சிலர் இதயப்பூர்வமாக பிதாவுடன் ஒத்துப்போவதற்கும், மற்றவர்கள் வெளிப்புறமாக மட்டும் இணக்கமாக வருவதற்கும் இடையே இன்னும் வேறுபாடு இருக்காதா? ஏனென்றால் இந்த வெளிப்புற இணக்கம், மறுசீரமைப்பு மற்றும் பரிபூரணத்திற்கான வழியாகுமா?

சந்தேகத்திற்கிடமின்றி இது சரியான காரணமாயிருக்கிறது. இவ்வகையிலேயே நாம் பார்த்துவருகிற இந்த உவமை போதிக்கிறது. அதாவது இருதயத்தை உய்த்துஅறியும் இராஜாவாகிய நியாயாதிபதியைத் தவிர, வெளித்தோற்றத்தில் செம்மறியாடு மற்றும் வெள்ளாடு ஒரே மாதிரியான தோற்றத்தையும், நடத்தையையும் கொண்டிருக்கும். மேலும் இறுதியில் இருவகுப்பாரிடையே உள்ள உண்மையான இருதயத்தின் வேறுபாட்டை அனைவருக்கும் அவர் வெளிப்படுத்துவார். இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பெறும்பொருட்டு, ஆயிரமாண்டு அரசாட்சியில் அனைவரும் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

**நியாயத்தீர்ப்பின் அடிப்படை**

எல்லா நேரத்திலும் ஒவ்வொரு தனிமனிதரும் குணநலன்களை உருவாக்குவார். இந்தவொரு குணநலன்கள் மாபெரும் நியாயாதிபதியினால் முற்றிலும் போற்றப்படும். மேலும் அந்த நபர் ''செம்மறியாடா'' அல்லது ''வெள்ளாடா'' என்று தரம் பிரிக்கப்படுவார். அதன்படி, செம்மறியாடு வகுப்பார் அனைவரும் மாபெரும் யேகோவா தேவனால் அவருடைய வலது பக்கத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவர். வெள்ளாடு வகுப்பாரோ ஆயிரமாண்டு அரசாட்சியின் ஆசீர்வாதங்களை அனைவரும் பெற்றிருந்தபோதிலும், மேலும் வெளித்தோற்றத்தில் ராஜ்யத்தின் சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிகிறவர்களாக இருந்தாலும், தேவனுடைய அநுக்கிரகத்திற்கு வெளியே இருப்பவர்களாக தரம் பிரிக்கப்படுவர்.

ஆயிரமாண்டு அரசாட்சி முடிவுக்கு வரும்வரை, நியாயாதிபதியின் முடிவானது வெளிப்படுத்தப்படமாட்டாது. அப்போது இரு வகுப்பாரும் ஆச்சரியப்படும்படியான வகையில் அவருடைய முடிவானது காண்பிக்கப்படும். வலதுபுறத்தில் உள்ள ''செம்மறியாட்டை'' நோக்கி, ''வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே(என் பிதா ஆசீர்வதிக்க பிரியப்படுகிறார், நித்திய ஜீவனை அருளிச்செய்கிறார், வாருங்கள்) உலகமுண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்''. தேவன் இந்த பூமியை அஸ்திபாரப்படுத்தி அதை மனிதக் குடியிருப்பாக பயன்படுத்த திட்டமிட்டபோது, அதை உங்களுக்கே தரும்படியாக அதை வடிவமைத்தார். அந்த இராஜ்யத்தில் நுழைந்து, அதை சுதந்தரிக்கும் நேரம் இப்போது வந்திருக்கிறது.

இந்த இராஜ்யம், அதே மேசியாவின் இராஜ்யத்தைப் போன்ற இராஜ்யமல்ல. மாறாக, தேவன் ஆதாமுக்குக் கொடுத்த இராஜ்யமாகும். ஆதாமினுடைய கீழ்ப்படியாமையினாலே அவர் இழந்துபோன இராஜ்யமாகும். கிறிஸ்து தம்முடைய பலியினாலே மீட்டெடுத்த இராஜ்யமாகும். இந்த இராஜ்யமானது தேவனைப்போன்ற குணநலன்களில் வளர்ச்சியடைந்தவர்களுக்கே தரப்படும். அதாவது, ஆயிரமாண்டு அரசாட்சியில் கர்த்தருடைய செம்மறியாடு வகுப்பாராக வருபவர்களுக்கே அந்த இராஜ்யம் தரப்படும்.

இந்த உவமையில் கூறப்பட்ட வெள்ளாடு வகுப்பாராகிய மற்ற வகுப்பார் ''சபிக்கப்பட்டவர்களே, நித்தியமான தண்டனைக்காக என்னைவிட்டு அகன்றுபோங்கள்'' என்று கண்டிக்கப்படுவர். நீதியுடனும், சத்தியத்துடனும், தேவஆவியுடனும் தொடர்புடைய ஆயிரமாண்டுகளின் அனைத்து சலுகைகள், ஆசீர்வாதங்கள் மற்றும் அனுபவங்கள் எல்லாம் அருளிசெய்தும், நீங்களோ வெளித்தோற்றமான கீழ்ப்படிதலை வெளிப்படுத்தி, இருதயத்திலோ தேவனோடு இசைவுக்கு வரவில்லை. நான் உங்களை என்னுடைய செம்மறியாடாக ஏற்றுக்கொள்ள முடியாது. நான் உங்களை பிதாவினிடத்தில் குற்றமற்றவர்களாகவும், கறையற்றவர்களாகவும் என்னால் அனுப்பமுடியாது. நீங்கள் அழியவேண்டியவர்கள். அதாவது நித்திய அழிவாகிய இரண்டாம் மரணமே அந்த தண்டனையாகும். உங்கள்மேல் உள்ள இந்த தண்டனையானது நித்தியமான ஒன்றாகும். ஏனெனில் மீட்படையவோ அல்லது இரண்டாம் மரணத்திலிருந்து உயிர்த்தெழவோ மற்றொரு ஏற்பாடு செய்யப்படுவதில்லை. இனி நீங்கள் முன்பு எப்படி இல்லாதநிலையில் இருந்தீர்களோ,அப்படியே இருப்பீர்கள். நீங்கள் தேவனுடைய நன்மையை முற்றிலும் பயன்படுத்த தவறியதோடு, அவருடைய சாயலுக்கொத்த குணநலன்களையும் பிரதிபலிக்கவில்லை. தேவ சாயலையும் தேவஆவியையும் பெற்றிருப்பவர்களுக்கே நித்திய ஜீவன் கிடைக்கப்பெறும். ''அப்படிப்பட்டவர்கள் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும்படி பிதாவானவர் விரும்புகிறார்''.

இராஜாவாகிய நியாயாதிபதி, ''வெள்ளாடு'' மற்றும் ''செம்மறியாடு'' வகுப்பாருக்கு எதன் அடிப்படையில் நியாயத்தீர்ப்பு செய்யப்பட்டது என அறிவிக்கும்போது, இவ்விரு

வகுப்பாரும் ஆச்சரியமடைவர். செம்மறியாடு வகுப்பாரைப் பார்த்து; “பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்” – மத் **25:35–36.**

வெள்ளாடு வகுப்பாரைப் பார்த்து; “அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்பவர்களைப்பார்த்து அவர்; சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய ஆக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன் நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை” – மத் **25:41–43** என்று சொன்னார்.

“செம்மறியாடு”மற்றும் “வெள்ளாடு” வகுப்பாராகிய இரு வகுப்பாரும், தாங்கள் அம்மாதிரியான அனுபவங்கள் பெறவில்லை என தெரிவிக்கின்றனர். “எப்போது நாங்கள் உமக்கு ஊழியம் செய்தோம் ? எப்போது நாங்கள் உமக்கு ஊழியம் செய்யத் தவறினோம் ? என்பார்கள். அதற்கு,மிகவும் சிறியோராகிய என் சகோதரருக்கு எதை செய்தீர்களோ அல்லது செய்யவில்லையோ அதை எனக்கே செய்தீர்கள் அல்லது செய்யவில்லை என்பதே பதிலாயிருந்தது.

**செம்மறியாடு வகுப்பாரின் இயல்புகள்**

இப்போது, செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வகுப்பாரின்மேல் வரும் சோதனையில் கூறப்பட்ட(மிகவும் சிறியோராகிய என் சகோதரர்) இவர்கள் யாராக இருக்கும் ? ஆயிரமாண்டு அரசாட்சியில் ஜனங்கள் வியாதியஸ்தராக, பசியுள்ளவராக, சிறையிலடைக்கப்பட்டவர்களாக இருப்பார்களா ? அம்மாதிரியாக நாம் புரிந்துகொள்ளவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறாரா ? மாறாக, அப்பொழுது, வியாதி, பசி, சிறைவாசம் அனைத்தும் ஒருபோதும் இராதபடி ஒழிந்துவிடும் என நாம் அறிகிறோம். ஆகவே இவையனைத்தின் அர்த்தம் என்ன ?

இதன் பொருள் எளிமையானது. ஆயிரமாண்டு அரசாட்சி ஸ்தாபிக்கப்படும்போது, அதோடுகூட இசைந்து வருகிற யாவரும், மற்றவர்களுக்கு ஏதோஒருவகையில் உதவிசெய்ய மாபெரும் சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர். ஆவிக்குரிய உணவு குறைபாட்டினாலும், தங்கள் கண்களுக்கு சத்தியம் என்னும் கலிக்கம்(மருந்து) போடாததினாலும் இவ்வுலகம்இப்போது குருடாகவும், பற்றாக்குறையிலும் உள்ளது. கர்த்தருடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்பவர்களுக்கு ஆயிரமாண்டு அரசாட்சியின் ஆசீர்வாதங்கள் ஊற்றப்படும். அங்கே உதவிகள் தேவைப்படும் மற்றவர்களும் இருப்பார்கள். தேவனுடைய ஆவியையும், அன்பின் ஆவியையும் பெற்றவர்கள், பரலோகச் செய்தியாகிய ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை, அனைத்து மனுக்குலத்திற்கும் கொண்டுசெல்வதில் பெரு மகிழ்ச்சியடைவர். அதோடுகூட, குருடாக்கப்பட்டிருக்கிற கண்களுக்கு மகிழ்ச்சியோடு கலிக்கம் போடுவதிலும், செவிடரின் காதுகளை மகிழ்ச்சியோடு திறக்கவும், பாவ வியாதியில் உள்ளவர்களை மீண்டும் தேவனோடு இசைவுள்ளவர்களாக மீண்டும் கொண்டுவருவதிலும் மிகுந்து மகிழ்ச்சியடைவர். அதாவது, அவர்கள் பெற்றுக்கொண்டவாறு மேசியாவின் இராஜ்ய ஆசீர்வாதங்களுக்கும், அதாவது கிறிஸ்துவின் புண்ணியக் கிரயத்தினாலே அவர்களுடைய நிர்வாணத்தை மூடுவதற்குமான உதவிகளுக்கு நேராக அவர்களைக் கொண்டுசெல்வர்.

இம்மாதிரியான கிரியைகளை செய்வதில் மகிழ்ச்சியடைபவர்கள், தேவனுடைய ஆவியைப் பெற்றவர்களாகவும், அவருடைய உடன் ஊழியர்களாகவும் தங்களை வெளிப்படுத்துவர். இவர்கள் அனைவரும் செம்மறியாடு வகுப்பாராவர். மறுபக்கத்தில் தங்களுடைய பொருத்தனையைக் குறித்து கவலையற்றவர்களாக, வெறுமனே ஆயிரமாண்டின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறவர்களாக மாத்திரம் இருப்பவர்கள் வெள்ளாடு வகுப்பாராவர். அதினால் தங்களை வெள்ளாடு வகுப்பாராக முத்திரை குத்திக்கொள்வதோடுகூட, மாபெரும் இராஜாதிஇராஜாவும், நியாயாதிபதியுமாகிய மகிமையின் கர்த்தருடைய அநுகூலங்களுக்கு வெளியே இருப்பர்.

**உலகின் உயிர்த்தெழுதல்**

இந்த உவமையில், “காவலிலிருந்தோர்” என்ற வார்த்தை மாபெரும் மரணத்தின் சிறைவீட்டைக் குறிக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இந்த சிறைவீட்டிற்கு ஏறக்குறைய 2000கோடி ஜனங்கள் ஏற்கனவே சென்றிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் மீண்டும் வரவேண்டும். ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வராமல், “அவனவன் தன்தன் வரிசையின்படி உயிர்ப்பிக்கப்படுவான்” என வேத வசனங்கள் விளம்புகிறது. சபை மாத்திரமே முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும்.

ஆயிரவருடாட்சியில் சிறைவீடாகிய மரண நித்திரையிலிருந்து எழுந்துவருவது, நிச்சயமாகவே தெய்வீக வல்லமையினால் வருகிறது. ஆனால் அது நம்முடைய ஜெபத்திற்கான பதிலாக இருக்கும் என நாம் நம்புகிறோம். ஒவ்வொரு குடும்ப வட்டமும், அதின் அடுத்தடுத்த அங்கத்தினர்களின் வருகைக்காக மிகுந்த மகிழ்ச்சியுடன் தயாராவதோடு, அவருடைய வருகைக்காக வேண்டுதல் செய்வர். இவ்வாறு “சிறைவீட்டிலிருந்து” வரும் மனுக்குலம், அவர்கள் எந்த வரிசையில் காவல்வீட்டிற்குள் நுழைந்தார்களோ, அதற்கு நேர்மாறாக(பிந்தினோர் முந்தினோராக) வெளியே

வருவார்கள். அதினால் தங்கள் நண்பர்களாலும் உறவினர்களாலும் அடையாளங் காணப்பட்டு, அவர்களோடு பழக ஆயத்தமாயிருப்பர்.

கர்த்தருடைய ஆசீர்வாதம் எல்லார்மேலும் அபரிதமாக இருக்கும் என்றாலும், அந்த ஏற்பாடு அவர்களுடைய உடன் நபர்களின் கைகளில் இருக்கும் என தெளிவாக யூகிக்கலாம். மரணமாகிய மாபெரும் சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு, குறிப்பாக, ஆர்வத்துடனும் ஜெபத்துடனும் ஆயத்தம் செய்யும் ஆடுகளாக “செம்மறியாடு” இருக்கும். தங்கள் நேரத்தையும், ஆற்றலையும் ஈடுபடுத்துவதன்மூலம், சிருஷ்டிகரின் நோக்கத்துடன் இணக்கமாக, ஒரு நோக்கத்தை, விருப்பத்தை வெளிப்படுத்தும். இயேசுவின் கட்டளைப்படி, பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் வெளியே வரவேண்டும் என தேவன் சித்தங்கொண்டிருக்கிறார்(யோவான் 5:28.29). மேலும் தேவனோடும் கிறிஸ்துவோடும் அனுதாபங் கொண்டவர்கள், கிறிஸ்து எதற்காக மரித்தாரோ, அந்த ஊழியத்தை நிறைவேற்றுவதில் தேவனோடுகூட உடன்ஊழியர்களாக பணியாற்றுவார்கள். இந்த ஊழியத்தில் ஆர்வமில்லாத எவருக்கும், தேவ ஆவி குறைவாக இருப்பதோடு, இது வெள்ளாடு வகுப்பார் மீது சுமத்தப்பட்ட குற்றமாயிருக்கும்.

மனுக்குல உலகை மீட்டு, இந்த மீட்கப்பட்ட ஜனங்கள் அனைவரின் உயிர்த்தெழுதலுக்கும் வழிவகுத்தவர், உவமையில் கூறினதுபோல ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில், தன்னையே பிரதிநிதித்துவப்படுத்துவதாக அவர்களை எண்ணுகிறார். உவமையில் அவர் கூறுகிறபடி; “நான் பசியாயிருந்தேன், நீங்கள் எனக்கு போஜனம் கொடுத்தீர்கள், நான் வியாதிப்பட்டு, காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்”, எனக்கு சேவைசெய்து உதவினீர்கள் என்கிறார்.

அவ்வாறே வெள்ளாடு வகுப்பாருக்கான கடிந்துரையாக, அவர்களை நோக்கி, “நீங்கள் தேவனுடைய காரியங்களில் அக்கறை கொள்ளாமலிருந்தீர்கள், உங்கள் ஆர்வம் அல்லது விருப்பம், தன்னலம் அல்லது சுயநலமாயிருந்தது. இந்த மகிமையான ஆயிரம் ஆண்டுகளின் ஆசீர்வாதங்களை அனுபவித்துவிட்டீர்கள். மேலும் அவ்வளவே தேவன் உங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். நித்திய ஜீவனை அருளும்படி அவருக்குப் பிரியமான வகுப்பாராக நீங்கள் இருக்கவில்லை. ஆகவே நீங்கள் மரிப்பீர்கள். ஏறக்குறைய நீங்கள் சாத்தானுடைய சுயநலஆவியை உடையவர்களாய் இருக்கிறீர்கள். தேவனுடன் அவருடைய ஆவியில் ஐக்கியப்படாமல் இருப்பவர்களுக்கான அவருடைய ஏற்பாடு அழிவாயிருக்கிறதுபோல, இரண்டாம் மரணமே உங்களுக்கான பங்காயிருக்கும் என்பார்.

நித்திய அக்கினி என்பது தேவனுடைய எரிச்சல் அல்லது கோபத்தின் நெருப்பாகும். இது அவருடைய நீதிக்கு விரோதமான அனைத்தையும் எரித்து அழிக்கிறது(செப்பனியா 1:18; 3:8). நிச்சயமாகவே இது முழுமையான அழிவைக் குறிக்கும் அடையாளமான கூற்றே ஆகும்.

————————

**R 5536**

# அபிஷேகம் செய்யப்பட்டோரே பிரசங்கிக்க நியமிக்கப்பட்டுள்ளனர்

## THE ANOINTED ONLY ARE COMMISSIONED TO PREACH

**ஆதார வசனங்கள் : ஏசாயா 61: 1–3**

“கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்மேல் இருக்கிறது;
சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க
கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம்
நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும்,
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,
கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,
கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய
தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும்,
துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்,
சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும்,
அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச்
சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த
தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத்
துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை
அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய
மகிமைக்கென்று நாட்டின நீதியின்
விருட்சங்களென்னப்படுவார்கள்” **– ஏசாயா 61:1–3.**

ஏசாயா தீர்க்கதரிசி இந்த வார்த்தைகளை அவர் பரிசுத்தஆவியின் வல்லமையினால் பேசினார். அப்போஸ்தலராகிய பேதுரு நமக்குச் சொல்வது போல், “தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்”என்கிறார். மேலும் அவர், “உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்தஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது” –2பேதுரு1:21 ; 1பேதுரு1: 10:12.

நமது ஆதார வசனத்தில் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்ற வார்த்தையானது, திருநிலைப்படுத்தல் அல்லது நியமித்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இஸ்ரயேலின் பிரதான ஆசாரியர்கள், தொடர்ச்சியாக

தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டனர் அல்லது திருநிலைப்படுத்தப்பட்டனர். இங்கு அபிஷேக எண்ணெய் பரிசுத்தஆவியை அடையாளப்படுத்துகிறது. அவர்களுடைய இராஜாக்கள் தேவனுடைய நிழலான இராஜ்யத்தின் மீது ஆளுகை செய்வதற்காக அபிஷேகம் செய்யப்பட்டனர். இங்கு கூறப்பட்ட எண்ணெயும் பரிசுத்தஆவியையே அடையாளப்படுத்துகின்றது. அவ்வாறே மாபெரும் பிரதான ஆசாரியரும் இராஜாவுமாகிய கிறிஸ்து, ஆவியின் அபிஷேகத்தினால் தேவனால் திருநிலைப்படுத்தப்பட்டவராய் இருந்தார். இது மனுஷருடைய அபிஷேகமுமல்ல அல்லது, மனிதர்களால் செய்யப்பட்ட அபிஷேகமும் அல்ல.

நமது கர்த்தருடைய விஷயத்தில் இந்த தீர்க்கதரிசனம் துல்லியமாக எப்போது நிறைவேறியது என்பது நமக்குத் தெரியும். அவர் ஞானஸ்நானம் பெறுவதற்காக யோர்தான் நதிக்கரையில் யோவானிடம் வந்தபோது, அங்கு அவர் தம்மையே தேவனுக்கு பலியாக ஒப்புக்கொடுத்தார். அவருடைய இந்தப் பலியை தேவன் ஏற்றுக்கொண்டார் என்பதற்கு பரிசுத்தஆவி அவருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதன் மூலமாக வெளியாக்கப்பட்டது. யோவான் ஸ்நானகன் ஒரு புறாவைப்போல பரிசுத்தஆவி கர்த்தர் மீது இறங்குவதைக் கண்டார். இது யோவானுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளம். இதனை வேறு யாரும் பார்க்கவில்லை. பிதாவிடமிருந்து தாம் ஒரு விசேஷித்த அபிஷேகத்தையும் அருளையும் பெற்றுக்கொண்டதை இயேசு அடையாளங் கண்டுகொண்டார். அந்தச் சமயம் துவக்கி மற்றவர்களும் அதை உணரலாயினர். இயேசு அபிஷேகம் செய்யப்படுவதற்கு முன்பே அற்புதங்களைச் செய்தார் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. இப்படிக் கூறுவதனால்அந்த சமயத்துக்கு முன்புவரை, அவர் கனிவான வார்த்தைகளைக்கூட பேசாமல், நல்ல செயல்கள் எதுவும் செய்யாமல் இருந்தார் என்பதாக புரிந்துகொள்ளக்கூடாது. ஏனென்றால் தேவ சாயலிலிருக்கும் ஒரு மனிதன் முழு அளவில் தேவஆவியைப் பெற்றிருப்பதுபோல, அவர் பரிபூரண மனிதனாக அதை அடைந்திருந்தார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு தம்முடைய விசேஷமான அர்ப்பணிப்பைச் செய்வதற்கும், அவருடைய நியமனம் மற்றும் பிரசங்கிப்பதற்கான உத்தரவைப் பெறுவதற்கும் முன்பாக முப்பது வயதுவரை காத்திருந்த சம்பவமானது, அவருடைய பின்னடியார்களும் பிரசங்கிக்கத் தொடங்குவதற்கு முன்பு முப்பது வயதுவரை காத்திருக்க வேண்டும் என்பதை அர்த்தப்படுத்தாது. தேவனால் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்தின் தேவைகளுக்கு இயேசு தம்மை இணங்கச்செய்வது அவசியமானதாயிருந்தது. ஏனென்றால் ஒரு மனிதனாக இயேசு ஒரு யூதராக இருந்தார். நியாயப்பிரமாணத்தின் கீழாகப் பிறந்து, அதன் ஒவ்வொரு அம்சத்திற்கும் கீழ்ப்பட்டிருந்தார். நியாயப்பிரமாணத்தின் கீழாக முப்பது வயதுவரை முழு மனிதத்துவம் அடையப்படமுடியாது. ஆதாம் பறிகொடுத்த ஜீவனுக்கு பதிலீடாக நம்முடைய ஆண்டவர் தம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்காக உலகத்திற்கு வந்தார். ஆதாம் ஒரு முழுமையான பரிபூரண மனுஷனாக இருந்தார். மேலும் நமது ஆண்டவர் ஒரு சரியான பதிலீடாக, சரிநிகர் சமான விலையாக இருப்பதற்குமுன்பாக, அவர் ஒரு பரிபூரண மனுஷனாக முதிர்ச்சியடைய வேண்டியிருந்தது.

**கிறிஸ்துவின் சரீரத்துக்கு ஈடுபலியில் எந்த பங்களிப்பும் இல்லை**

இந்த சுவிசேஷ யுகக் காலத்திலிருக்கும் கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களிடத்தில், காரியம் முற்றிலும் வேறுபட்டதாயிருக்கிறது. இயேசுவின் மரணத்தின் புண்ணியத்தையும், அவருடன் உடன்–பலி செலுத்துபவராக மாறுவதன் முக்கியத்துவத்தையும் தெளிவாக உணர்ந்துகொள்ளும் முதிர்ச்சியடைந்த சிந்தை பெற்றிருப்பவர்க்கே அர்ப்பணிப்பு பொருத்தமானதாக இருக்கின்றது. கிறிஸ்துவின் பின்னடியார்கள் மீட்கும்பொருளைக் கொடுப்பதில் பங்காளிகளாக இருப்பதில்லை. அது கர்த்தருடைய வேலை மட்டுமே. ஆனால் அவருடைய சீஷர்கள்மீது அவருடைய புண்ணியம் அருளப்பட்டு, அவருடைய சரீர அங்கங்களாக அவர்கள் மாறியபிறகு, அந்த சீஷர்கள் உலகத்துக்கான பாவநிவாரணபலியின் ஒரு பகுதியாக இயேசுவோடு எண்ணப்படுவதற்கு, தேவனுடைய மாபெரும் தயவின் செழுமையினால் அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த அவருடைய புண்ணியமானது அவர்களின் பலிக்கு அவர்களால் வேறுவகையில் அடையமுடியாத ஒரு வல்லமையை அளிக்கிறது. அவருடைய புண்ணியம் எல்லாவற்றிற்கும் போதுமானதாய் இருக்கிறது. அவருடைய புண்ணியமே அவருடைய சரீரமாகிய திருச்சபை மூலம் உலகை வாங்குகிறது.

கிறிஸ்துஇயேசுவின் மேல் இருந்த அபிஷேகமானது அவருடைய பூமிக்குரிய ஊழியம் முழுவதும் அவருடன் நிலைத்திருந்தது. தேவனுடைய தயவின் முழுமை அல்லது பரிபூரணம் அவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் செயலிலும் தங்கியிருந்தது. தேவன் இவருடைய மாம்சத்தில் வெளிப்பட்டார். ஏனென்றால் அவர் யேகோவாதேவனுடைய சகல மகிமையான குணாதிசயத்தின் பூரண மனித பிரதிநிதியாக இருந்தார். இந்தக் கூற்றானது அவருடைய பலி முழுமையாக செலுத்தி முடிக்கப்பட்ட பிறகு, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததில் நிரூபிக்கப்பட்டது. இல்லையெனில் அவரது பலியின் வேலை தோல்வியடைந்திருக்கும். அவர் மரித்தவர்களின் கூட்டத்தில் இன்னும் தங்கியிருக்க நேர்ந்திருக்கும். மேலும் அவரது மரணத்தால் மனுக்குலத்திற்கு எந்த நன்மையும் ஏற்பட்டிருக்கமுடியாது. இயேசுவின் ஞானஸ்நானத்தில் அபிஷேகம் பண்ணப்பட்டு, பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலின்போது மிக உயர்ந்த ஸ்தானத்தில் ஒரு முழுமையான ஆவியின் ஜீவியாகப் பிறந்தார். இந்த ஜீவதளத்தில் வேறெந்த சிருஷ்டியும் ஒருக்காலும்

சிருஷ்டிக்கப்பட்டதில்லை. அதுவரைக்கும் யேகோவாதேவன் மட்டுமே தெய்வீக, அழியாத ஜீவனைப் பெற்றிருந்தார்.

**நமது ஆதார வசனம்( தலை மற்றும் சரீரமாகிய) முழு கிறிஸ்துவுக்கும் பொருந்தும்**

நம்முடைய ஆதார வசனத்தில் கூறப்பட்ட தீர்க்கதரிசியின் வார்த்தைகள், நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்குப் பொருந்தும் என்பதை நாம் எந்த நேரடியான வாக்கியமும் இல்லாமல் ஊகித்திருக்கக்கூடும். ஆனால் அவர் வளர்ந்த ஊராகிய நாசரேத்தில் உள்ள ஜெபஆலயத்தில் அவர் ஆற்றிய பிரசங்கத்தில் அவர்தாமே இந்த வார்த்தைகளை மேற்கோள் காட்டியதைக் காணும்போது, நம்முடைய சிந்தைகளில் எந்த சந்தேகமும் இருப்பதில்லை. அவர் அங்கே எழுந்துநின்று இந்த தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதியை உரக்க வாசித்தார். பின்னர் புத்தகத்தை மூடிவிட்டு, "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று" என்றார்(லூக்கா 4:16–21). தாம் தான் தீர்க்கதரிசியால் குறிப்பிடப்பட்டவர் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்தப் பயன்பாடு ஒவ்வொரு வகையிலும் சரியாகப் பொருந்திவருவதாக நாம் காண்கிறோம்.

ஆனால் தீர்க்கதரிசனம் முதலாவதாக இயேசுவில் நிறைவேறி, குறிப்பாக அவருக்குப் பொருந்தப்பண்ணினாலும், அது கிறிஸ்துவின் அங்கத்தினர்களுக்கும் பொருந்தும் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். இவர்கள் அவருடைய சரீரமாக ஆவதன் மூலமாக, அவரில் ஒரு பகுதியாக மாறியிருக்கிறார்கள். இது அவர்களின் சொந்த புண்ணியத்தினால் உண்டாகவில்லை.

திருச்சபையின்மீது இருக்கும் இந்த அபிஷேகமானது, கிறிஸ்துவின்மூலம் நமக்கு வருகின்றது. சங்கீதக்காரனால் அறிவிக்கப்பட்டபடி, இது இஸ்ரயேலின் பிரதான ஆசாரியருடைய நிழலில் காண்பிக்கப்பட்டபடி, தலையின்மேல் ஊற்றப்பட்டு, அனைத்து சரீர அங்கங்கள்மீதும் இறங்குகின்றது(சங்கீதம் 133:2). கர்த்தராகிய இயேசு பரமபிதாவிடத்தில் நமக்கான மாபெரும் பரிந்துபேசுபவராக இருக்கிறார். அவரில் மட்டுமே நாம் தேவனுக்கு முன்பாக நிற்கிறோம். இவ்வாறு நாம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட குமாரர்களாக, நம்முடைய தலையைப்போலவே பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். அவரைப்போலவே நாமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம்.

நமது கர்த்தருடன் அவருடைய சரீர அங்கங்களாக நாம் கொண்டிருக்கிற நமது உயிராதாரமான ஐக்கியத்தைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி கூறியுள்ளார். 49:2–7 வரையிலான வசனங்களையும், அதற்கு விளக்கமாக அப்போஸ்தலர் பவுலால் 2கொரிந்தியர் 6:1,2 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதையும் கவனமாக வாசித்துப்பாருங்கள். மேலும் அவரே பின்வருமாறு அறிவிக்கிறார்; "சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்... நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" – 1கொரிந்தியர் 12:12 ; 10:16,17 ; 12:27.

மீண்டும் அப்போஸ்தலனாகிய பவுல் திருச்சபையைப்பற்றி, "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் (தேவன்)உங்களை அழைத்தார்" என்று அறிவிக்கிறார். அப்போஸ்தலருடைய ஆவியின் அபிஷேகத்திற்குப்பிறகு, அவர்களால் தங்கள் மீது பிரகாசித்த வெளிச்சத்தில் இரட்சகரின் ஆழமான வார்த்தைகள் எவ்வளவாய் ஒளிர்கிறது. தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு சற்று முன்பு கொடுத்த வாக்குறுதியை எஜமானர் எப்படியாக அவர்களுக்கு நிறைவேற்றினார்! "இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவி வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்தும்; அது தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிக்கும்" என்று அவர் கூறின வார்த்தைகளை நினைவுகூறுகிறோம்(யோவான் 16:12,13). தேவனுடைய ஆழமான விஷயங்களாகிய இவைகளை ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட, ஆவியினால் போதிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளால் மட்டுமே புரிந்துகொள்ளமுடியும்.

நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவரைப்போல் ஆவதோடு, அவருடைய மகத்தான மகிமையையும் பகிர்ந்துகொள்வோம். "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவி எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறது" – 1கொரிந் 2:9,10 என்று மகிழ்ச்சியோடு அப்போஸ்தலர் அறிவித்ததில் ஆச்சரியம் இல்லை..

**நம் ஆதார வசனத்தை தற்போது பொருந்தச்செய்தல்**

"நாம் அவராலே பெற்ற அபிஷேகம் நம்மில் நிலைத்திருக்கிறது" என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். மேலும், "அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும்(தேவனிலும்) அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்". இயேசு, "பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி(திருச்சபைக்காக)

பரிசுத்தஆவியைப் பெற்று, இதைப் பொழிந்தருளினார்'' என்று அப்போஸ்தலனாகிய பேதுரு அறிவிக்கிறார்(**1யோவான்2:27; 4:13; அப்போஸ்தலர் 2:33**). இது பிதாவிடமிருந்து, குமாரன் மூலமாய் வருகின்றது. ''பிதாவினாலே சகலமும் உண்டாயிருக்கிறது, குமாரன் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது'' என்ற பரிசுத்த பவுலின் கூற்றை இது உறுதிப்படுத்துகிறது(**1கொரிந்8:6**). நாம் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

**திருச்சபையின் வருங்காலப்பணி**

திருச்சபையினுடைய அபிஷேகமானது எதிர்காலப் பணிக்கான அபிஷேகமாக உள்ளது. கிறிஸ்து மற்றும் திருச்சபையின் பணியானது தற்போதைய யுகத்தில் நிறைவேற்றப்படாது. ஆனால் தேவன் யாரை ஏற்றுக்கொண்டாரோ, அவர்களிடம் அவர் ஒப்படைத்திருக்கும் தாலந்துகளை, தற்கால ஜீவியத்தில் அவருடைய ஊழியத்தில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கிறார். அவர்கள் தங்களால் இயன்றவரை இருதயம் நொருங்குண்டவர்களுக்குக் காயங்கட்டி,''துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தைப்'' பூசவேண்டும். இவ்வாறாக பிறருடைய துன்பங்களைத் தணிக்க உதவவேண்டும். அவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் பொருத்தமான வாய்ப்புக்குத்தக்கதாக எல்லோருக்குமே உதவவேண்டும் என்றாலும், அவர்கள் விசேஷமாக கர்த்தருடைய வீட்டாருக்கு உதவவேண்டும். ஆனால் உலகத்தை ஆசீர்வதிப்பது, ஆறுதல்படுத்துவது எனும் அவர்களின் விசேஷித்த வேலையானது, இராஜ்யத்தில் செய்யப்படும். முழு மனுக்குலமும் கல்லறையிலிருந்து திரும்பக் கொண்டுவரப்பட்டு, மேசியாவின் ஆளுகையில் அனைத்து ஆசீர்வதிக்கப்பட்ட உதவிகளும் அவர்களுக்குக் கிடைக்கும். தீமையான அனைத்தும் வேரோடு பிடுங்கப்படும், நல்லவைகள் அனைத்தின் வளர்ச்சியானது ஊக்குவிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்படும்.

தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் திரைக்கு இந்தப் பக்கத்தில் இருக்கும்போது, அவர்கள் அவருடைய ஸ்தானாபதிகளாக, வரவிருக்கும் இராஜ்யத்தைப் பற்றியும், எல்லா மனுஷர்மீதும் கர்த்தருடைய தயவுகள் பொழியப்பட்டு, அனைவர்மீதும் ஆசீர்வாதங்கள் ஊற்றப்படுவது பற்றியும் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதன் மூலமாக, அவருடைய புண்ணியங்களை அறிவிக்கவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இந்த ஆசீர்வாதங்கள், இப்போது வாழ்ந்துகொண்டிருப்போர் மற்றும் கல்லறைக்குள் இறங்கினவர்கள் என இருவருக்குமானது என்று அவர்கள் அறிவிக்கவேண்டும். உலகத்திற்கான தேவனுடைய மகத்தான திட்டம், நாம் முன்பு நினைத்ததைக் காட்டிலும் மிகவும் பரந்தது மற்றும் உன்னதமானது. இப்பேர்ப்பட்ட தேவனை நம்முடைய தேவனாகப் பெற்றிருப்பது தகுதியானதே. ஆகவே கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்கள் மற்றும் ஊழியக்காரிகள் மீது தம்முடைய ஆவியை இப்போது ஊற்றிக்கொண்டிருக்கிறார். விரைவில் மாம்சமான அனைவர்மீதும் – முழுமனுக்குலத்தின் மீதும் அதனை ஊற்றுவார் என்று நாம், கேட்கும் காதுள்ள அனைவருக்கும் கூறுவோமாக.

இந்த அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பார், ''சாந்தகுணமுள்ளவர்களுக்கு'' பிரசங்கிக்கவேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் கலகம் செய்பவர்களுக்கோ, அலட்சியமானவர்களுக்கோ பிரசங்கிக்கக்கூடாது; இவர்கள் எதிர்காலத்தில் கையாளப்படுவார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் அவர்களின் இருதயங்களை வலுக்கட்டாயமாக உடைத்து, அவர்கள் அனைவரையும் திறம்படக் கையாளும். கர்த்தருடைய ஸ்தானாபதிகள், குறிப்பாக எல்லா இடங்களிலும் கர்த்தரைப் பின்தொடர்வதற்கான உணர்வை வெளிப்படுத்துபவர்களையும், உலகப் பொருட்களில் திருப்தியடையாதவர்களையும், ஆனால் சிறந்த, உன்னதமானவைகளுக்காக ஏங்குபவர்களையும், கற்கும் மனப்பான்மை கொண்டவர்களை மற்றும் அதனை வெளிப்படுத்துகிறவர்களையுமே தேடவேண்டும்.

**யார் கர்த்தருடைய நாமத்தில் பேசலாம்**

தேவனுடைய நாமத்தில் பேசுவதற்கென்று தெய்வீக நியமனம் பெற்றவர்களைத் தவிர வேறு யாரும் பேசக்கூடாது என்பதை நமது ஆதார வசனம் உணர்த்துகிறது. மற்றவர்கள் தாங்கள் இதுவரைக்கும் கற்றுக்கொண்ட கதையைச் சொல்லலாம், ஆனால் அவர்களுக்கு கர்த்தருடைய நாமத்தில் பேசுவதற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. இப்படிப்பட்டோர் சத்தியத்துடன் தப்பறையைக் கலந்து, நன்மையைக் காட்டிலும் தீங்கையே அதிகம் செய்யக்கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஏனெனில் அந்தச் செய்தியைப் புரிந்துகொள்ளாதவர்கள், கர்த்தருடைய ஸ்தானாபதிகளாக இருப்பதற்கு நியமிக்கப்படவில்லை. தேவனுக்கு முன்பாக, மனித நியமனமெல்லாம் ஒன்றுமில்லாததாக எண்ணப்படும். மனித நியமனத்தில் ஒவ்வொரு சபைப்பிரிவும் அதன் சொந்த ஊழியர்களை தகுதிப்படுத்துகிறது. ஆனால் தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியர்கள், அவருடைய ஊழியர்களே தவிர தப்பறையின் ஊழியர்களல்ல. அவர்கள் மனுஷருடைய பாரம்பரியங்களுக்கு அல்ல, அவருடைய சத்தியத்தின் ஊழியக்காரர்களாய் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய நாமத்தில் பேசுவது குறித்து நாங்கள் மேலே சொன்னது, தேவனுடைய உண்மையான திட்டத்தைக் காண்பவர்களைத்தவிர வேறு யாரும் ஒருபாடலைக்கூட பாடக்கூடாது என்று சொல்லும் அளவுக்கு விஷயத்தை எடுத்துச் செல்லவேண்டும் என்பதை அர்த்தப்படுத்தாது. உண்மையில் சொல்லப்போனால், தேவனுடைய பிள்ளைகள் சத்தியத்தை அறிவிப்பதில் இருந்து யாரையும் தடுக்க முயற்சிக்கக்கூடாது. அவருடைய நாமத்தில் சிலர் கிரியைசெய்து வருவதை தாங்கள் கண்டதாகவும், அவர்கள் அவரைப் பின்பற்றாததால் அவர்களைத் தாங்கள் தடைசெய்ததாகவும், இயேசுவிடம் அவருடைய சீஷர்கள் சொன்னபோது, மேற்சொன்ன கொள்கைக்கு ஒரு நல்ல

உதாரணத்தை கர்த்தர் கொடுத்தார். “அவர்களைத் தடுக்கவேண்டாம்” என்று கர்த்தர் பதிலளித்தார். இப்படியாகவே நம்மிடத்திலும் இருக்கவேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் எவருடனும், சண்டையின் மூலமாகக்கூட நாம் தலையிடக்கூடாது. ஏனென்றால் அவர்கள் ஏதாவது நன்மை செய்யக்கூடும். சுவிசேஷம் என்று தாங்கள் எதை நம்புகிறார்களோ அதைப் பிரசங்கிப்பவர்களைத் தடுப்பதற்கும் நாம் முயற்சிசெய்யக்கூடாது. இது நமக்கான தற்போதைய கட்டளைப்பணியோ அல்லது அதன் எந்த பகுதியுமோ இல்லை. நாம் இன்னும் உலகத்தினை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதிகள் ஆகவில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கும், தேவனுடைய உண்மையான ஸ்தானாபதிகளாக அல்லது ஊழியர்களாக இருப்பவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அடையாளங் காணவேண்டும்.

தம்முடைய நாவுகள் என்று கூறிக்கொள்ளும் சிலரை, “பொல்லாதவர்கள்” என்று தேவன்அழைக்கிறார். மேலும் “நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு. சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய்” என்று உரைக்கிறார்(சங்கீதம்50:16,17). தேவன் தம்முடைய பரிசுத்தஆவியின் அபிஷேகத்தை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை அங்கீகரிக்காதபோது, அவர்கள் அவரால் போதிக்கப்படாமல் இருக்கும்போது, அவருடைய சித்தத்தைச் செய்யாதபோது, அவர்கள் ஏன் அவருடைய செய்தியைக் கொடுக்க முயலவேண்டும்? மற்றவர்கள் அனைவரும் சத்தியத்துடன் ஒத்துழைக்கிறதில் அவர்கள் விரும்பியதைச் செய்யட்டும், ஆனால் இந்த ஒரே வழியில் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். தெய்வீக கட்டளையைப் பெற்ற அனைவரும் நற்செய்தியை பிரகடனப்படுத்தும் அருமையான பாக்கியத்திற்காக சந்தோஷப்படவேண்டும்.

கர்த்தருடைய ஸ்தானாபதிகளாகிய நம்முடைய கட்டளைப் பணியின் பல அம்சங்களில் ஒன்று, “துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்வது”ஆகும். ஆறுதலின் உண்மையான மூலாதாரத்தைக் குறித்துக் கற்றறிந்த தேவபிள்ளைகள் மட்டுமே, வேதாகமம் கூறும் அர்த்தத்தில், உண்மையான ஆறுதல் அளிப்பவர்களாக இருக்க சரியான தகுதி பெற்றிருக்கிறார்கள். மாபெரும் தெய்வீக மருத்துவரால் அவர்களுடைய சொந்த இருதயங்களின் காயங்கள் கட்டப்பட்டு, குணமடைந்துள்ளனர். எனவே தேவனால் மட்டுமே கொடுக்கக்கூடிய தைலத்தை தேவைப்படுகின்ற வாஞ்சையுள்ள இருதயங்களுக்கு, எதனைநோக்கி வழிநடத்துவது என்பது அவர்களுக்குத் தெரியும். அப்போஸ்தலன் கூறுவதுபோல், “நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்”(2கொரிந்1:3,4). ஆகவே மாம்சத்தில் இருக்கும்போதோ அல்லது திரைக்கு அப்பால் நம்முடைய சுதந்திரத்திற்குள் பிரவேசித்த பின்னரோ, நாம் ஆறுதல் அளிப்பவர்களாக இருக்கவேண்டும். துக்கத்தினாலும் கவலையினாலும் ஒடுக்கப்பட்டவர்களை உயர்த்தி, அவர்களுக்கு “ஆனந்தத் தைலமாகிய” கிருபையின் செய்திக்கு அவர்களைக் கொண்டு செல்ல வேண்டும்.

**நீதியைச் சரிக்கட்டும் நாளுக்கு முன்பு**

“சீயோனிலே துயரப்பட்டவர்களுக்கு” இந்தக் குறிப்பிட்ட நேரத்தில் நாம் ஆறுதல் அளிப்பவர்களாக இருக்கவேண்டும். தற்கால சத்திய செய்தியால் ஒளியூட்டப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்ட இன்றைய பரிசுத்தவான்கள் இப்பணியைச் செய்ய சிறந்த தகுதிபெற்றுள்ளனர். இந்தப் புத்துணர்ச்சியூட்டும் செய்தி நம்மிடம் வருவதற்கு முன்பாக, நம்மில் பலர் சீயோனில் துயரப்படுபவர்களாக இருந்தோம். நாம் பிணைக்கப்பட்டிருந்த பெயரளவிலான அமைப்புக்களில் நிலவிய குழப்பம் மற்றும் உலகப்பிரகாரமான ஆவி மற்றும் பஞ்சம் காரணமாக துயரமடைந்தோம். ஆனால் இப்போது நாம் விடுதலையடைந்திருக்கிறோம். மேலும் “பாபிலோன் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல் நம்முடைய கின்னரங்களைத் தூக்கிவைப்பதில்லை”. அவைகள் பரலோகத்தின் இன்னிசைகளுடன் ஒத்திசைவாக்கப்பட்டுள்ளன, அதனால் நம்மால் இப்போது மகிமை வாய்ந்த “மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய பாடலை”ஆவியோடும் புரிதலோடும் பாடமுடியும். ஆகவே இந்த மகிழ்ச்சியான செய்தியை இன்னும் கேட்டிராத, சீயோனில் துயரப்படுகிற அனைவருக்கும் இந்த சந்தோஷமிகு பாடலில் நம்முடன் இணைந்துகொள்வதற்கேதுவாக, எடுத்துச்சொல்வதில் வைராக்கியமாக இருப்போமாக.

நம்முடைய ஆதார வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள முழுச்செய்தியையும் பிரகடனப்படுத்துவதற்கான ஏற்றகாலம் இப்போது வந்தாயிற்று. நம்முடைய கர்த்தர் ஜெப ஆலயத்தில் தீர்க்கதரிசனத்திலிருந்து எடுத்து வாசித்தபோது அவர், “நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாள்” என்ற வார்த்தைகளைத் தவிர்த்துவிட்டதை நாம் நினைவில் கொள்கிறோம். தீர்க்கதரிசனத்தின் அந்தப் பகுதியை அறிவிப்பதற்கான ஏற்றகாலம் அப்போது வரவில்லை. அதேபோல, “உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று” என்ற இந்த வார்த்தைகளை அவரால் அப்போது கூறியிருக்கவும் முடியாது. ஏனென்றால் நீதியைச் சரிக்கட்டும் நாள் அப்போது சமீபமாக இல்லாததினால்

அவர் அதை அறிவிக்கவில்லை. எனவே எவைகளின் நிறைவேறுதல் அப்போது தொடங்கும் காலமாக இருந்ததோ, அந்த தீர்க்கதரிசனப் பகுதிகளை மட்டுமே அவர் வாசித்தார்.

ஆனால் இப்போது இந்த வேதவாக்கியப் பகுதியை முழுவதுமாக வழங்குவதற்கான ஏற்றக்காலமாக இருக்கின்றது. இந்த மகத்தான நீதியைச் சரிக்கட்டும் நாளுக்கு வெகு சமீபமாக நாம் இருக்கிறோம். செப்பனியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நாம் இப்போது அறிவித்துக்கொண்டிருக்கிறோம். ''கர்த்தருடைய நாள் என்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான். அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்; அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் (பலத்த மற்றும் நன்கு வேரூன்றிய அரசாங்கங்கள்) விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்; மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தபடியால் அவர்கள் குருடரைப்போல் நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப்போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும். கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது. அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும், தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்'' –செப்பனியா 1:14–18.

**ஒருபோதும் மறக்கக்கூடாத ஒரு பாடம்**

அச்சமும் இருளும் நிறைந்த அந்நாளில், தங்களை விடுவிப்பதற்கான பலத்த கரத்தின் தேவையைக் குறித்து மனுஷர் உணர்ந்துகொள்வார்கள். அவர்களின் பெருமையும், தன்னிறைவும், மண்ணோடு மண்ணாகிவிடும். ஆனால் அந்தப் பயங்கரமான உபத்திரவத்திலிருந்து மனுக்குலமானது தண்டிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டவர்களாக வெளிவரும். தங்களுடைய சொந்த திட்டங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பாழ்நிலையிலிருந்தும் தோல்வியிலிருந்தும், தங்களுடைய அறியாமை மற்றும் சுயநலத்தால் தங்கள்மீது தாங்களே வருவித்துக்கொண்ட இருள் மற்றும் குழப்பத்திலிருந்தும், பொல்லாத தூதர்களின் வல்லமையிலிருந்தும் வெளியேறி, பூமியின் சகல குடிகளின் ஆசீர்வாதத்திற்காக நெடுங்காலமாக வாக்களிக்கப்பட்டுள்ள தேவனுடைய அன்பான குமாரனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதன் மூலமாக, அப்போது அவர்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் வெளிச்சம், ஆசீர்வாதம் மற்றும் மீட்புக்கு நேராக வழிநடத்தப்படுவதற்கு அவர்கள் தயாராக இருப்பார்கள்.

அது என்றென்றைக்கும் மறக்கக்கூடாத பாடமாக இருக்கும். அப்போது இராஜ்யத்தின் ஆளுகைக்கு உயர்த்தப்பட்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள், மனுஷருடைய நொறுக்கப்பட்ட மற்றும் உடைந்த இருதயங்களின் காயங்களைக் கட்டி, குணப்படுத்தி, ஆசீர்வதிக்கும் தங்களுடைய வேலையைத் தொடங்குவார்கள். தற்கால ஜீவியத்தில் அடைந்த அவர்களின் சொந்த அனுபவமானது, பரிதாபமான, பாவநோயினால் பாதிக்கப்பட்ட உலகத்துடன் எவ்வாறு அனுதாபம் காட்டுவது என்பதை அவர்களுக்குக் கற்பித்திருக்கும். இப்படியாக மனுக்குலத்தின் காயங்கள்மீது ஆசீர்வதிக்கப்பட்ட கீலேயாத்தின் பிசின் தைலத்தைஅவர்களால் ஊற்றமுடியும். மேலும் அவர்களால் ''சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தைக்'' கொடுக்கவும், கண்ணீர் யாவையும் துடைக்கவும், அப்போது ஜனங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் பரிசுத்த பெரும்பாதையில் படிப்படியாக முன்னேற அனைவரையும் வழிநடத்தவும் முடியும். ''கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும் ; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்''–ஏசாயா **35:10.** திருத்தவே முடியாதவர்கள் மட்டுமே தங்கள்மீது மரண தண்டனையை – இரண்டாம் மரணத்தை, முற்றும் முழுமையான அழிவை மீண்டும் வருவித்துக் கொள்வார்கள். ''இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்'' – மத்தேயு **25:46.**

---------

**R 5538**

## இரட்சிப்பின் பாத்திரத்தின் ஆசீர்வாதம்
## THE BLESSING OF THE " CUP OF SALVATION"

**ஆதார வசனங்கள் : சங்கீதம் 116: 12–14**

'' கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்''

ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு இந்த வார்த்தைகள், தாவீது தீர்க்கதரிசியிடம் இருந்திருக்கமுடியாத ஒரு விசித்திரமான முக்கியத்துவத்தை உடையதாயுள்ளன. இருந்தபோதிலும், இவ்வார்த்தைகளின் உணர்வுப்படியான முறையான சிந்தையை ஒரு கணிசமான அளவுக்கு தீர்க்கதரிசி அடைந்திருந்தார் என்று நாம் யூகிக்கலாம். தேவனுடைய நன்மையை தாவீது ராஜா மதித்துணர்ந்திருந்தார் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. கர்த்தரிடத்திலிருந்து வந்த ஆசீர்வாதங்களுக்கு நன்றியுள்ளவராகவும், மிகவும் மதித்துணரும் இருதயத்தையும் அவர் அடைந்திருந்ததை அவரது சங்கீதங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. ''கர்த்தருக்கு, நான் எதை செலுத்துவேன் **?**'' ''அவருடைய கருணை அன்பு

அனைத்துக்கும், எதை என்னால் திருப்பி செலுத்தமுடியும் ?'' என்று அவருடைய இருதயம் போதுமானஅளவுக்கு, சரியாக கூக்குரலிட்டது.

ஆபிரகாமுடனான தேவனுடைய வாக்குத்தத்தத்தை தாவீது அறிந்திருந்தார். தேவன் பூமியின் குடும்பங்கள் அனைத்தையும் ஒருகாலத்தில் ஆசீர்வதிப்பார் என்றும் , இந்த ஆசீர்வாதமானது ஆபிரகாமின் வித்து மூலமாகவே வரும் என்றும் அவர் அறிந்திருந்தார். இஸ்ரயேல் ஜனங்கள் தாங்கள் ஆபிரகாமின் வித்து என்பதை அறிந்திருந்தார்கள். இவர்களில் ஒருவராக தாவீது ராஜா இருந்து, ஏதோ ஒருவழியில், இந்த வாக்குத்தத்தத்துடன் தான் அடையாளங் காணப்படுவதை உணர்ந்திருந்தார். இவ்விஷயம் அவருக்கு ஓரளவு தெளிவற்றதாய் இருந்தபோதிலும், ஆபிரகாமின் வித்து உலகை ஆசீர்வதிக்கும்.

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுப்பதற்கான விருப்பத்தை தெரிவிக்கும்போது, அந்த இரட்சிப்பில் பங்கடைவதற்காக அவருக்குத் தேவையான அனுபவங்கள் எவை என்று கர்த்தர் கருதுகிறாரோ அதை ஏற்றுக்கொள்வதாக, சங்கீதக்காரனின் சிந்தை இருப்பதை நாம் உணர்கிறோம். தனக்கு அத்தகைய பங்குகிடைக்கவேண்டுமென்று கர்த்தரைநோக்கி தொடர்ந்து கூப்பிடவும், கர்த்தரிடத்தில் செய்த தன் பொருத்தனைகளை அவரது ஜனங்கள் முன்னிலையில் நிறைவேற்றுவதாகக் கூறுகிறார். அவர் பயபக்தியுடன் கூடிய பொருத்தனைகளைச் செய்திருந்து, அதை ஒரு சிலாக்கியமாக எண்ணி அவற்றை நிறைவேற்றுவதிலும், தேவ சித்தம் செய்வதிலும் அவர் பெருமகிழ்ச்சியடைந்தார்.

**ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குஆழமான முக்கியத்துவம் கொண்டுள்ளது**

ஆயினும் கிறிஸ்தவர்களுக்கு இவையனைத்தும் அதிக ஆழமான முக்கியத்துவம் உடையதாயுள்ளன. நம் கர்த்தராகிய இயேசுவில் ஆரம்பித்து, இவ்வார்த்தைகள் சபையின் மாபெரும் தலையுடன் உடன்சுதந்திரராகும்படி அழைக்கப்பட்ட தேவ புத்திரர் ஒவ்வொருவருக்கும் விசேஷ அர்த்தத்தை உடையதாயிருக்கிறது. பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்து. புத்திரருக்குரிய உறவுக்குள் ஏற்றுக்கொண்டபிறகு, தேவனுடைய எல்லா இரக்கங்களுக்கும் விசேஷமாய் திரும்பும்படி இவர்கள் விரும்புவார்கள். இயேசுவின் மூலமாக அவர்களுடைய பாவங்களுக்கு நிஜமான மன்னிப்பை இவர்கள் பெற்றிருக்கிறார்கள், தாவீதோ அதை அடையவில்லை. அவருடைய பாவங்கள் அடையாளமாக மட்டுமே மூடப்பட்டன. ''எதை நான் உமக்குச் செலுத்துவேன்'' என்று அவராலேயே கூறமுடியுமானால், நாம் அதைக்காட்டிலும் அதிகமாக; ''கர்த்தருக்கு எதை நான் செலுத்துவேன்'' என்று நாம் கூறவேண்டும்.

''அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' என்று அப்.பவுல் நமக்கு புத்திமதி கூறுகிறார்(ரோமர் 12:1) . நம் சரீரங்களை ஜீவபலிகளாக நாம் மகிழ்ச்சியோடு கொடுக்கிறோம். உண்மையுள்ள ஒவ்வொரு நேரிய இருதயமும் நன்றியுணர்வை, அன்பு மற்றும் இரக்கத்தில் மறுமொழியாக வெளிப்படுத்துவர். மேலும் வேறு எந்த உன்னதசெயலும், உயர்ந்த நோக்கங்களும் அவர்களுக்கு இனிமையும் அதிக ஊக்கமுமாக இணக்கமளிக்காது. தம்முடைய பிள்ளைகள் தங்களது சொந்த நலனுக்காகவும், மற்றவர்களுக்காகவும், உண்மையான பெருந்தன்மை மற்றும் ஒழுக்க உயர்வின் அனைத்து கிருபைகளையும் அபிவிருத்தி செய்ய தேவன் விரும்புகிறார். ஆகவே நம்மிடத்தில் காண்பிக்கப்பட்ட அன்பு மற்றும் இரக்கத்தின் ஒவ்வொரு செயலையும் நாம் கவனித்து, நன்றியுணர்வையும் மதித்துணருதலையும் திருப்பி செலுத்த கவனமாயிருப்பது மிகப் பொருத்தமானது. சுயநலமும், முன்யோசனையில்லாத தன்மையும் ஆத்துமாவின் உன்னத உள்ளுணர்வுகளை வெளியேற்றுவதனால் அன்பு அடிக்கடி பதிலீடு செய்யப்படாமற்போகிறது.

மனித அன்பும் இரக்கச்செயல்களும், இந்த நன்றியுணர்வாகிய கிருபையையும் மதித்துணருதலையும் நம்மில் பெருமளவில் பயிற்றுவிக்கும்படி திரும்பத்திரும்ப இழுக்கும்போது, நம் பரலோகத் தகப்பனின் இரக்க அன்பும், கருணையும் நம் உள்ளத்தைக் கவர்ந்து, மறுமொழிகூறும்படி நன்றியோடு அறிக்கையிடவும், துதிக்கவும் நம்மை எவ்வளவு அதிகமாக இழுக்கவேண்டும் ! நாம் அடைந்திருக்கிற ஒவ்வொரு நன்மைக்கும் அவருக்கு நாம் கடன்பட்டிருக்கிறோம். அவருடைய அன்பினால் உன்னதமானவரின் மறைவிடத்திற்குள் கொண்டுவரப்பட்டு, நம் பிதாவின் பண்டகசாலையின் செழுமையாகிய, உச்சிதமான கோதுமையை புசிக்கும்படி ஏற்படுத்தப்பட்டவர்கள் மட்டுமே இது எதைக் குறிக்கிறது என்று அறிவார்கள். நாம் அவருடைய கிருபையின் விசேஷ காரணிகளாக இருக்கிறோம்.

**அவருடைய கருணை அன்பு எவ்வளவு பெரியது !**

நம் நிமித்தமான ஒரு நீண்ட விசேஷ பராமரிப்பு மற்றும் சலுகைகளை நம்மில் யாரால் கண்டறிய முடியாது ? நம் வாழ்க்கையின் கடந்தகால நிகழ்வுகளை பின்னோக்கிப் பார்க்கும்போது, நம்மில் யாரால் கவிஞருடன் வியந்துபாராட்ட முடியாமற்போகும் ? ''திரும்பிப் பார்க்கையில் தேவன் என்னை நாளுக்குநாள் வழிநடத்திய வழியை எண்ணி துதிக்கிறேன்''

கர்த்தர் தம் ஜனத்தை எவ்வளவு அற்புதமாய் வழிநடத்தியிருக்கிறார் ! அவருடைய நிலையான பராமரிப்புக்குள் அவரது பிள்ளைகள் எப்பொழுதும் இருக்கிறார்கள். நன்மையான எதையும் அவர் அவர்களுக்கு நிறுத்திவைப்பதில்லை. அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிவார்களானால், அவர்களுக்கு அனைத்துக் காரியங்களும் நன்மைக்கேதுவாகவே நடக்கும்.

சூரியப்பிரகாசத்திலும், நிழலிலும் புன்னகைகளிலும், கண்ணீர்களின் மத்தியிலும் அமர்ந்த தண்ணீர்களண்டையிலும், புயல் மற்றும் சூறாவளியினிடையேயும் அநேக வருடங்களாக கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பவர்கள் அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மற்றும் அவரது நிலைத்திருக்கும் உண்மைத்தன்மைக்கு தங்களது மெய்ம்மையை நிரூபிக்கவில்லை. “உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை…”(யோசு23:14). நம் ஜீவியத்தின் மிகப்பெரிய மற்றும் மிகச்சிறிய நடவடிக்கைகளில் நம் நலன்களையே அவர் எப்பொழுதும் கவனித்து வந்திருக்கிறார். ஒவ்வொரு மேகமும் ஒரு தங்கக்கீற்றைப் பெற்றிருக்கிறது.

ஆகவே கர்த்தர் நமக்குச்செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் நாம் அவருக்கு எதைக் கொடுப்போம்? உண்மையாகவே அவரிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளாதது எது நம்மிடத்திலுள்ளது? எதுவுமில்லை. தன் குழந்தை தான் பெற்ற தயவுகளை மதித்துணர்ந்து ஏற்றுக்கொள்வதைக் காண, கருணையுள்ள பெற்றோர் விரும்புவதுபோல், நம் பரலோகத் தகப்பன் நம்மிடத்தில் காண்பிக்கும் அவரது அன்பையும் தயவுகளையும் நாம் மதித்துணருவதை வெளிப்படுத்துவதையும், அவரிடத்திலான நம் மனப்பான்மையையும் அவ்வாறே கருதுகிறார். நமக்கான அவருடைய சொல்லிமுடியாத ஈவுகள், அவரது இருதயத்திற்கு ஒரு மாபெரும் விலைகொடுத்தே வாங்கப்பட்டன. ஆகவே நம் மீட்பரிடத்திலான விசுவாசத்தின் மூலம் நாம் நன்றியுணர்வுடன் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்து, கர்த்தருக்கு நம் பொருத்தனைகளை செலுத்துவோமாக. இந்த துன்பம் மற்றும் மகிழ்ச்சியின் பாத்திரத்தில் நம் நேச எஜமானரோடு சேர்ந்து இந்தப் பாத்திரத்தில் நாம் பானம் பண்ணுவோமாக. “நாம் பயப்படாதிருந்து நம்பிக்கை கொள்வோமாக”.

பிதாவினிடத்தில் தங்களை முழுமையாக சரணடையச் செய்தவர்களுக்கு, அவர் ஒரு விசேஷித்த முன்னேற்பாட்டைச் செய்திருக்கிறார். அவர்களுக்காக அவர் ஏற்பாடு செய்திருக்கிற அனுபவங்கள், “இரட்சிப்பின் பாத்திரத்தை” கட்டமைக்கின்றன. கர்த்தரிடத்திலிருந்து இப்பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அவரது முன்னேற்பாட்டின்படி நமக்கு வரும் அனுபவங்கள் அனைத்தையும் –அவை மகிழ்ச்சியாகவோ, துக்கமாகவோ, வலி அல்லது இன்பம் அல்லது எதுவாயிருப்பினும் அவற்றை நாம் ஏற்றுக்கொள்கிறோம். “என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?” என்று இயேசு உரக்கக்கூறினதுபோலவே, நம் இருதயங்களின் பாஷையும் இருக்கவேண்டும். மோசே சர்ப்பத்தை வனாந்தரத்தில் உயர்த்தினதுபோல, தாமும் உயர்த்தப்படவேண்டும் என்று நிழலாக நம் கர்த்தரைக் குறித்து முன்னுரைக்கப்பட்டிருந்தது. விழுந்துபோன மனிதருக்காக தாம் பாவமாக்கப்பட்டு, மாபெரும் நிஜமான பாவநிவாரணபலியாக இருப்பதை அவர் அறிந்திருந்தார். ஆயினும் பிதா தமக்கென குடிக்கும்படி ஊற்றின இப்பாத்திரத்தில் குடிக்க மிகவும் விருப்பமாயிருப்பதாக அவரே அறிவித்தார். இந்தப் பாத்திரத்தையே நமக்கு அவர் கொடுத்திருக்கிறார்.

இராஜ்யத்தில் நம் இரட்சகருக்கு அடுத்த ஸ்தானத்தில் உட்கார விரும்பின தம் சீஷர்களிடத்தில்; “நான் குடிக்கும் பாத்திரத்தில் உங்களால் பானம் பண்ணக்கூடுமா? என்று அவர் கேட்டார். அவரே அந்தப் பாத்திரத்தில் கடைசிவரை தொடர்ச்சியாக பானம் பண்ணிக்கொண்டே இருந்தார் – பாத்திரத்தின் வண்டல்வரை அவர் பருகினார். அவருடைய பின்னடியார்களிடத்திலும் அம்மாதிரியே காணப்படவேண்டும். அவர் பானம்பண்ணின இதே பாத்திரத்தில் நாம் பானம்பண்ண வேண்டும். இது நம் தனிப்பட்ட பாத்திரமாயிருந்தாலும், அவருடைய பாத்திரமேயாகும். நாம் நிஜமாகவே உண்மைத்தன்மையோடு இருப்போமானால், நன்றியுணர்வோடும் மகிழ்ச்சியோடும் பாத்திரத்தில் நமது பங்கை ஏற்றுக்கொள்வோம். இதில் நாம் பானம்பண்ணும்போது, அவர் நம்மோடுகூட இருப்பார் என்று நாம் அறிவோம், நாம் தனித்திருப்பதில்லை. தம் அங்கங்கள் ஒவ்வொருவரின் அனுபவங்களை அவர் மேற்பார்வையிடுகிறார். ஒவ்வொரு சோதனையிலும், உபத்திரவத்திலும், அந்த சோதனை மிக கடுமையாக அச்சுறுத்துமானால் அவர் தப்பிக்கும் போக்கையும் ஏற்படுத்துவார்.

**இராஜ்யத்தில் மகிழ்ச்சியின் பாத்திரம்**

கர்த்தருடைய மரணத்தை நினைவுகூறும் நியமத்தின்போது, தம் அப்போஸ்தலர்களிடம் நம் போதகர் உரையாடியதாவது: “இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடுகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்”(மத்தேயு26:29). நம் கர்த்தர் இங்கு, உபத்திரவத்தின் நாள் மற்றும் மகிமையின் நாள் ஆகிய இரண்டு மாபெரும் நாட்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டைக் காண்பிக்கிறார். இந்த சுவிசேஷ யுகமானது உபத்திரவத்தின் நாளாக இருந்துவருகிறது. “கிறிஸ்துவின் நாள்” என்று குறிப்பாய்ப் பேசப்பட்ட ஆயிரமாண்டு யுகமானது மகிமையின் நாளாக இருக்கப்போகிறது.

திராட்ச ரசம் அடங்கிய சொல்லர்த்தமான பாத்திரமானது, இரண்டு கருத்துக்களைக் குறிப்பிடுகிறது. பாத்திரத்திலுள்ள திராட்ச ரசமானது திராட்சப் பழங்களின் ஜீவனை விலையாகக் கொடுத்து உருவாக்கப்பட்டது. திராட்சப் பழம் தன் சொந்த தனித்தன்மையை இழக்கிறது. திராட்சப் பழங்கள் பிழியப்படுவதனால் திராட்ச ரசம் உண்டாக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு தயார் செய்யப்படுகிறது. ஆயினும் திராட்ச ரசத்தால் நிரப்பப்பட்ட பாத்திரம், திராட்சப்பழ ரசம், திராட்சப்பழங்களைப் பிழிவதனை மட்டுமல்ல, அதன் முடிவாக வரும் மகிழ்ச்சியையும் குறிப்பிடுகிறது. அவ்வாறே இந்த

உருவகமான பாத்திரத்தில் நாம் பானம்பண்ணுவதிலும் இருக்கிறது. நமக்கோ, இது நம் இரட்சகரின் துன்பங்களையும் மரணத்தையும், நாம் அவரோடுகூட இந்த துன்பங்களில் பங்குபெறுதலையும் அடையாளப்படுத்துகிறது. ஆனால் அதேசமயத்தில், திராட்சரசமானது வேதாகமத்தில் மகிழ்ச்சி, குதூகலம் ஆகிய இவற்றையும் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே "திராட்சப்பழ ரசம்" என்று கர்த்தரால் உபயோகிக்கப்பட்ட வார்த்தைகள், முந்தின பத்தியில் குறிப்பிடப்பட்டபடி, ராஜ்யத்தின் மகிழ்ச்சிகளை பாத்திரம் குறிப்பிடுகிறது.

நம் கர்த்தராகிய இயேசுவின் பூமிக்குரிய அனுபவங்களில், அவருக்கென்று ஒரு குறிப்பிட்ட விசேஷித்த பாதையை பிதா நியமித்திருந்தார். இந்தப் பாதையானது, பாடுகள் மற்றும் மரணமாகிய அவருடைய பாத்திரத்தை ஏற்படுத்தியது. ஆனால் அவர் இந்தப் பாத்திரத்தில் உண்மைத்தன்மையோடு பானம் பண்ணினபிறகு, மகிமை கனம் சாவாமை என்கிற ஒரு வேறுபட்ட அனுபவம், ஒரு வேறுபட்ட பாத்திரம் அவருக்குக் கொடுக்கப்படும் என்று பிதா அவருக்கு வாக்களித்திருந்தார். அதன்பின் நம் இரட்சகர், அவருடைய பின்னடியார்களாகும்படி விரும்புகிறவர்களுக்கு இதே முன்மொழிவை ஏற்படுத்த பிதாவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அவர்கள் அவரோடு துன்பப்படுவார்–களானால், அவரோடுகூட மரணமாகிய அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவார்களானால், அப்பொழுது அவரோடுகூட மகிழ்ச்சியின் பாத்திரத்தில் வருங்காலத்தில் அவர்கள் பங்கேற்பார்கள்.

### "இப்பொழுதே அநுக்கிரகக் காலம்"

நம்முடைய பாத்திரமானது மகிழ்ச்சியின் பாத்திரமாகவும், கசப்பின் பாத்திரமாகவும் இருக்கின்றது. ஆனால் கசப்பான அடிவண்டலைக் குடிப்பதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கும்போது, பிதாவின் சித்தத்தை செய்வதில் களிகூர்ந்தவராக, இந்த கசப்பில் உண்மையாயும், தைரியமாயும் பங்கெடுத்த அவரையே நாம் நினைவுகூருவோமாக! நாமும் தைரியங்கொண்டு நம் நேச கர்த்தரோடு இந்தப் பாத்திரத்தில் பங்குபெற தகுதியுள்ளோராக கருதப்பட்டதற்கு களிகூறுவோமாக! இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணுவதோடு தொடர்புடைய அவருடைய அனுபவங்களில் தெய்வீக உதவியும் பலமும், பரிபூரணராக இருந்த அவருக்கே தேவையாயிருந்திருக்க, அவர் பிதாவினிடத்தில் தேவையான உதவிவேண்டி ஊக்கத்துடன் ஜெபித்ததுபோலவே நாமும் செய்யவேண்டும். நாம் சோதனைக்கவர்ச்சிக்குள் பிரவேசிக்காதபடிக்கும், யாரிடமிருந்து மட்டும் நமக்கு உதவி வருகிறதோ, அவரிடமிருந்து நாம் வேறுபக்கமாய்த் திரும்பிவிடாதபடிக்கும் தொடர்ந்து நம்மைப் பாதுகாக்கவேண்டும்.

"நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை இப்போதே செலுத்துவேன்" **(சங்116:18)** என்று சங்கீதக்காரன் கூறியுள்ளார். திருச்சபைக்கு "தற்போதே அநுக்கிரகக் காலம், தற்போதே இரட்சிப்பின் நாள்". தற்போதே பலிகள் செலுத்தப்படுவதற்கான காலம், பிற்பாடு அல்ல. நாம் நம்மீது ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த பொருத்தனைகள், இந்த பலியின் உடன்படிக்கை, நம்மால் நிறைவேற்றப்பட்டாகவேண்டும் என்று கர்த்தர் ஏற்பாடு செய்திருக்கிறார். நாம் அர்ப்பணித்திருக்கிற இந்த மாம்சம் பட்சிக்கப்படவேண்டும். பலிபீடத்திலிருந்து பலிகளை விலக்கிக்கொள்ள நாம் முயற்சிப்போமானால், மாம்சத்தை அழிக்கும் விதத்தில் நாம் நடத்தப்படுவோம். இல்லாவிடில் நாமே அழிக்கப்படுவோம். பிதா நமக்கென ஆயத்தம் பண்ணியிருக்கிற பாத்திரத்தில் நாம் உண்மையோடு பானம் பண்ணுவோமானால், அவ்வாறு பானம் பண்ணுவோருக்கென அவர் வாக்களித்திருக்கிற ஆசீர்வாதங்களை பிற்பாடு நாம் பெற்றுக்கொள்வோம். ஆகவே இப்போது, தற்கால ஜீவியத்தில் அவர் நமக்குக் கொடுத்திருக்கிற இந்த பாத்திரத்தில் நாம் பானம்பண்ணுவோமாக. தற்போது இதைச் செய்யவில்லையெனில், வரவிருக்கிற ஜீவியத்தில் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களில் நமக்கு எந்த பங்குமில்லை.

நம் கர்த்தருடைய விஷயத்தில், சொல்லர்த்தமான சிலுவை மரணம் அவசியமாயிருந்தது. நியாயப்பிரமாணத்தின் கோரிக்கையை அவர் முழு அளவில் சுமக்கவேண்டியிருந்தது. நியாயப்பிரமாணத்தின்கீழ், ஒவ்வொரு மீறுதலின் தண்டனையையும், மிகக் கொடிய குற்றவாளியின் வழக்கைக்கூட அவர் சுமக்க வேண்டியிருந்தது. இல்லாவிடில், ஒவ்வொரு யூதனையும் அவரால் மீட்கக்கூடாதிருந்திருக்கும். அவர் மரத்தில் தொங்கி, நியாயப்பிரமாணத்தின் சாபத்தை சுமக்க வேண்டியிருந்தது. ஆனால் நம் அனுபவங்களிலோ, சிலுவையானது நேரடி அர்த்தத்திலான சிலுவை மரம் அல்ல, நேரடி அர்த்தத்திலான ஆணிகள் அல்ல, மாறாக கசப்பான வார்த்தைகளும், அவதூறுகளும், பெயரை தவறாக சித்தரித்தலும் நிச்சயம் நமது பங்காக காணப்படும். ஒருவேளை சரீரத்தின் கடைசி அங்கங்கள் சிலருக்கு, சிலவகையில் சரீர ரீதியான துன்புறுத்தலும் நேரிடக்கூடும். நாம் அறியோம்.

### சிலுவையின் வழியில்

"தன் ஜீவனைக் காக்க விரும்புகிறவன் அதை இழப்பான்". திராட்சை ஆலையால் குறிப்பிடப்பட்ட , சோதிக்கும் அனுபவங்களை நாம் அனைவரும் கடந்துசெல்லவேண்டும். நாம் தெய்வீக ஊழியத்தில் நம் ஜீவியங்களை கையளிக்க வேண்டும். மனித உணர்வுப்படி தனிநபர்களாக அழிக்கப்பட்டு புதுசிருஷ்டிகளாக மாற, நசுக்கும் அனுபவங்களுக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். "நாம் அவரோடுகூட பாடுபட்டால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்", வேறுவிதத்தில் அல்ல. ஆகவே அவரது பாத்திரத்தில் பானம்பண்ணும் அழைப்பிதழை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோமாக. பாத்திரத்தில் கடைசிவரை பானம்பண்ணாவிடில் ராஜ்யத்தின் மகிழ்ச்சிக்குரிய மற்ற பாத்திரத்தைப் பெறமுடியாது. நம் கர்த்தர் பிதாவினிடத்தில் காண்பித்த கீழ்ப்படிதலினால், மிகப்பெரிய ஆசீர்வாதத்தை

அடைந்திருந்தாலும், அவருடைய இறுதித்தருணத்தில், ''எல்லாம் நிறைவேறிற்று'' என்று சத்தமிட்டு ஒப்படைக்கும்வரையில், அவரை சோதிக்கும் நேரமாகவே இருந்தது. அவ்வாறே திருச்சபைக்கும் இருக்கும். பாத்திரத்திலுள்ள எல்லாவற்றையும் நாம் குடித்தாகவேண்டும். அதில் எதுவும் மீதம் வைக்கக்கூடாது. நாம் எல்லா அனுபவங்களையும் சகித்தாகவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரம் அதன் ஓட்டத்தை நிறைவுசெய்திருக்கும்போது, கிறிஸ்துவின் துன்பங்கள் அனைத்தும் முடிவடைந்திருக்கும். நம் கர்த்தர் மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, மகிழ்ச்சியின் புதிய பாத்திரம் அவருக்கு அளிக்கப்பட்டது. அப்பொழுது தேவனுடைய எல்லாத் தூதர்களும் அவரைத் தொழுதுகொண்டனர். நமக்கும் விரைவில் நம் மகிழ்ச்சியின் பாத்திரம் அளிக்கப்பட இருக்கிறது. உறங்கிக்கொண்டிருந்த பரிசுத்தவான்கள் 1878 வசந்தகாலத்தில் எழுப்பப்பட்டபோது, அது மகிமையின்வேளையாக இருந்ததில் எந்த ஐயமுமில்லை. அவர்கள் தங்கள் வெகுமதிக்குள் பிரவேசித்து, ஆசீர்வாதத்தின் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டனர். அதன்பிறகு, எஜமான் வந்திருக்கும்போது, மீதமிருந்தவர்களும் உயிரோடிருந்தவர்களும் ஒருவர்பின் ஒருவராக வீட்டிற்குள் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். நாமும் உண்மையுள்ளோராய் இருப்போமானால், நாம் அனைவரும் இந்த மகிழ்ச்சியில் அவர்களோடு விரைவில் பங்குபெறுவோம் என்பதில் சந்தேகமில்லை. இரண்டாம் திரைக்கப்பால் கிறிஸ்துவின் அங்கங்கள் அனைவரும் அவரோடுகூட ஒன்றிணையும்வரை மகிழ்ச்சியின் நிறைவு எட்டப்படாது என்று நாம் நம்புகிறோம். அப்பொழுது அவரது சிம்மாசனத்தில் நாம் பங்குபெறுவதோடு, அவரது மகிமையிலும் பங்கடைந்திருப்போம். அப்போது நம் நேச கர்த்தரோடுகூட, ராஜ்யத்தில் புதிய திராட்ச ரசத்தில் நாம் பானம்பண்ணுவோம். இந்த வாக்குத்தத்தம் அவரது உண்மையுள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

**நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று யேகோவா கூறுகிறார்**

நம் பாடத்தின் ஆதார வசனத்தில், தன்

பொருத்தனைகளை, ''அவருடைய(தேவனுடைய) ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்'' (சங்116:14) என்று சங்கீதக்காரன் முடிவுரையாக கூறுகிறார். நம் இருதயங்களில் நாம் உண்மைத்தன்மையோடு இருப்பது மட்டும் போதுமானதல்ல, மனிதர் முன்பாக சாட்சியமளித்து, வெளிப்படையாய் அறிக்கையிடுவதை கர்த்தர் விரும்புகிறார். ''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்; இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்(ரோமர்10:10). சத்தியத்துக்கு சாட்சியமளிக்கிற அனைவரும் அதற்கு இரத்த சாட்சிகளாகவேண்டும். வேறுவிதமாகக் கூறுவோமாகில், அவர்கள் அதற்காக மனதார துன்புறவேண்டும். அவ்வாறே உண்மையுள்ளோராய் தைரியத்தோடு, சத்தியக்கொடி பிடித்திருக்கிறவர்களிடையே பெரியஅளவில் இருக்கும். அவர்களே எதிராளிக்கு இலக்காவார்கள்.

மனுஷர் முன்பாக தம்மை அறிக்கை பண்ணாதவர்களை, பிதாவின் முன்பாகவும், பரிசுத்த தூதர்கள் முன்பாகவும் தாமும் அறிக்கைபண்ணுவதில்லை என்று நம் ஆண்டவர் கூறினார். முற்றிலும் உண்மைத்தன்மையோடு இருப்பவர்கள் மட்டுமே இந்த விசேஷித்த தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டத்தாராயிருக்கின்றனர். இவர்களுக்கு நம் கர்த்தர் தலையாயிருக்கிறார். இவர்கள் தற்போது விரைவில், பரலோக களஞ்சியத்திற்குள் சேர்க்கப்பட உள்ளனர்.

ஆகவே நம் ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவரோடுகூட பானம்பண்ணும் சிலாக்கியம் பெற்ற இந்த ஆசீர்வாதத்தின் பாத்திரத்தினை அதிகதிகமாக மதித்துணர்வோமாக. ஆகவே தேவையான ஒவ்வொரு சமயத்திலும் உதவும் கிருபைக்காக ''கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுவேன்''. ஒவ்வொரு நொடிப்பொழுதும், ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு நாளும் நமக்கு அவர் தேவையாயிருக்கிறார். நம் மாபெரும் பரிந்துபேசுபவரின் நாமத்தில் எந்நேரமும் நாம் கிருபாசனத்தண்டை சேரலாம்.

தம் பிள்ளைகளுடைய அழுகுரலுக்கு தகப்பனின் காது எப்பொழுதும் திறந்திருக்கிறது. அவர்கள் ''அவரது கண்ணின் கருவிழிபோல'' அவருக்கு அன்பானவர்கள். அவருடைய ''...உள்ளங்கையில் உன்னை வரைந்திருக்கிறார்''(ஏசா49:16). ''ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்''(ஏசா66:13) என்பதே அவருடையவர்களுக்கான அவரது வாக்குத்தத்தம். அவரது அனைத்து வரங்களுக்கும் நம்மிடத்தில் காண்பித்த அவரது ஒப்பற்ற கிருபைக்கும், அவருக்குக் கொடுக்க திருப்பி செலுத்துவதற்கு நம்மிடத்தில் சிறந்ததாக மிகமிக சொற்பமே உண்டு. ஆனால் நம்மிடமுள்ள சிறியவைகளோடுகூட இணைந்திருக்கிற அன்பு மற்றும் வைராக்கியத்தின் அளவே நம் பரலோகப் பிதாவிற்கும், நம் மாபெரும் மீட்பருக்குமான நம் நன்றியுணர்வின் அளவை சுட்டிக்காட்டும்.

''கர்த்தாவே, எதை நான் உமக்கு அளிப்பேன் ?

என் நினைவுகள் அனைத்தையும் தாண்டி உம் அன்பு கடந்தோடுகிறதே!

என் எளிய ஜீவியத்தை விலைகொடுத்து வாங்கினவருக்கு,

எப்பேர்ப்பட்ட பொருத்தமான அஞ்சலி செலுத்தமுடியும் ?

என் தாழ்நிலையில் என்னை நாடினவரே!

தெய்வீக உயரங்களுக்கு என்னை எழுப்பினவரே!

உம்மை துதிக்க, என்ன வார்த்தைகள் பொருத்தமாய் சத்தமிடும்!

உம்முடைய அன்பைப்போல என்ன சிந்தை என்னை சூழ்ந்துகொள்ளும்!

கர்த்தாவே, உமக்கு நான் என்னத்தை செலுத்துவேன் ?

என் இருதயத்தை, என் பலத்தை, என் ஜீவனை நான் கொண்டுவருகிறேன்!

என் கைகளும், என் குரலும் ஊழியத்தில் மகிழ்ச்சி,

உமக்கே என் இரட்சகரே, என் இராஜாவே!

―――――――

**R 5533**

## தேவனுடைய பன்முகத்தன்மையுடைய ஞானமும் இரக்கமும்

## GOD'S MUCH DIVERSIFIED WISDOM AND MERCY

**ஆதார வசனங்கள் : ரோமர் 11 : 15,16 "அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தைஒப்புரவாக்குதலாயிருக்க அவர்களை அங்கீகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது, மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போலிருக்குமல்லவா ? மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும். வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும் ".**

யூத தேசமானது அடையாளமான வழியில் தேவனோடு ஒப்புரவாகியிருந்து, அதினால் அவருடைய விசேஷித்த ஜனங்களாயினர். அவருடைய எல்லா வாக்குத்தத்தங்களும் அவர்களுடையதாயிருக்கிறது. அம்மாதிரியான எந்தவொரு வாக்குத்தத்தங்களும் புறஜாதிகளுக்கு ஏற்படுத்தப்படவில்லை. தேவனிடத்திலான யூதர்களுடைய உறவானது அவர்களுடைய உடன்படிக்கையின் மூலமாக வந்தது. ஆனால் 1845 வருடங்களாக அவர்களுக்கு இருந்த விசேஷித்த அநுகூலமானது பின்பு அவர்கள் மேசியாவை நிராகரித்ததன் மூலம் அந்த விசேஷ சிலாக்கியங்களில் தொடர்வதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்பதை நிரூபித்தது. பரீட்சையின் காலத்தில் அவர்கள் இன்னும் குறைவுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். 1845 வருட தயவற்ற இரட்டிப்பின் காலங்கள் நிறைவேறும்வரை குருட்டுத்தனத்துக்கும், இடையூறுக்கும் ஒப்புவிக்கப்பட்டனர்

இருந்தபோதிலும், இவ்வாறு அநுகூலமான சூழ்நிலையிலிருந்து எல்லாரும் நிராகரிக்கப்படவில்லை. மற்றவர்கள் சிதறடிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டபோது, மீந்திருந்த உண்மையுள்ளவர்கள் சுவிசேஷ மந்தைக்குள் சேர்க்கப்பட்டனர். மீந்திருந்த இந்த உண்மையுள்ளோர் கிறிஸ்துவின் சபையில் முதற்பலன்களாயினர். பின்பு தேவன் தம்முடைய செய்தியை முழு உலகிற்கும் அனுப்பினார். ரோமர்கள், கிரேக்கர்கள், பிரிட்டிஷ்காரர்கள், பிரென்ச்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், ஸ்வீடன் ஜனங்கள், நார்வேயன்கள், டானிஷ்காரர்கள் முதலிய எல்லா தேசங்களும் அதே வாய்ப்பை பெற்றிருந்தனர். எல்லா தேசங்களிலுள்ள ஒவ்வொரு தனிநபர்களுக்கும் இந்த வாய்ப்பு தரப்பட்டது என்று இதற்கு அர்த்தமல்ல. ஆனால் கர்த்தர் இங்குமங்குமாக பொருத்தமான குணநலன்களை உடையோராக, நீதியின்மேல் பசிதாகமுள்ளோராக, கேட்கிறதற்கு காதுள்ளவர்களை இந்த செய்தியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டவர்களை தேர்ந்தெடுத்தார் என்பதை அர்த்தப்படுத்துகிறது. தேவன் இவர்களுக்கு இந்த ஒப்புரவாக்குதலின் நற்செய்தியை தந்ததுடன், இம்மாதிரியான வகுப்பாருக்கு இந்த நற்செய்தியினை பகிரும்படி அனுப்பினார்.

இந்த நற்செய்தியை நம்பினோர் அனைவரும் அவருடைய குமாரனுடைய மரணத்தின்மூலம் தேவனோடு ஒப்புரவாகினர். அவர்கள் பலிசெலுத்தும் கூட்டத்தினராக, எஜமானுடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடப்பவர்களாக, தங்களுடைய வாழ்க்கையை மகிழ்ச்சியோடு ஒப்புக்கொடுத்தார்கள். இந்த மாபெரும் இரட்சிப்பின் நற்செய்தியானது இந்த தற்கால யுகத்தின் எல்லா வருடங்களிலும் சென்றது. மேலும் ஒவ்வொரு தேசத்திலிருந்தும் சிலர் கிறிஸ்துவின் சரீரமாக ஆவதற்கு செவிசாய்த்தனர். யூதர்கள் ஒரு தேசமாக உண்மையில்லாதவர்களென தங்களை நிரூபிக்காதிருந்தால், தேவ ஆதரவிலிருந்து தள்ளப்படாதிருந்தால், இது நடந்திருக்காது. புறஜாதியார் இதை அறிந்திருந்தனர். யூதர்களிடமிருந்து தேவ ஆதரவும், தேவ ஆசீர்வாதமும் எடுக்கப்பட்ட அதே சமயத்தில், அவை தங்கள்பக்கம் திரும்பினது என்பதை அவர்கள் கண்டனர்.

**மரணத்திலிருந்து ஜீவன்**

மாம்சீக இஸ்ரயேலரானவர்கள் தேவ ஜனங்களுக்குரிய தயவிலிருந்து நிராகரிக்கப்பட்ட பின்பும், தனி நபர்களாக கிறிஸ்துவிடம் வருவதற்கான வாய்ப்பை இன்னும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஒரு தேசமாக விசேஷித்த அநுகூலமில்லை. இயேசுவை தங்கள் மேசியாவாக நிராகரித்ததோடுகூட, அவர்களுடைய கசப்பான குருட்டுத்தன்மை மற்றும் தப்பெண்ணமானது, நிச்சயமாகவே, சுவிசேஷ செய்தியிலிருந்து பிரிக்கும் பெரிய பிளவுபோல் அந்த ஜனங்களிடம் செயல்பட்டது. ஆனால் வெகுசிலரே கிறிஸ்துவுக்குள்ளான தேவசெய்தியை ஏற்றுக்கொண்டிருந்தனர். அப்போஸ்தலர் கூறுவதுபோல், "புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும்"(சுவிசேஷ யுக சபை நிறைவடையும்வரை) ஒரு தேசமாக அவர்களுடைய குருட்டுத்தன்மை நீக்கப்படாது. சுவிசேஷ யுக சபை முடிவடைவதற்கான நேரம் தற்போது நெருங்கிவிட்டது.

மாம்சீக இஸ்ரயேலருடைய மறுசீரமைப்பு எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பதை நாம் நினைவுகூறுகின்றோமா ? ஆம். புது உடன்படிக்கையின் மூலமாக இது நிறைவேற்றப்படும் என்று வேத வாக்கியங்கள் விளம்புகின்றன. "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது இதுவே அவர்களுக்கான என் உடன்படிக்கையாகும்". மேசியாவினுடைய இராஜ்யம் ஸ்தாபனமாகும்போது இது நிறைவேறும். இந்த உடன்படிக்கையை மேசியா அப்போது துவக்கிவைக்க உள்ளார். இது யூதர்களுக்கு எதை அர்த்தப்படுத்துகிறது ? அவர்களுடைய "இரட்டிப்பு" நிறைவேறியதை இது குறிக்கிறது. அதாவது அவர்களுடைய குறிக்கப்பட்ட நேரம் முடிவடைவதுடன் அவர்களுடைய அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்(வேதாகமப் பாடங்கள், தொகுதி 2– அத்தியாயம் 7 பார்க்கவும்). தேசமாகவும் தனிப்பட்ட நபர்களாகவும், அடையாளமாகவும் நேரடி அர்த்தத்திலும் அவர்கள் மரணத்திலிருந்து உயிரடைவதை இது குறிக்கிறதாக உள்ளது. "அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, (அதாவது பெரும்பான்மையான யூதர்கள் ஒலிவ மரத்திலிருந்து முறித்துப் போடப்பட்டிருக்கிற இடத்தில் ஒட்டவைக்கப்பட்டிருக்கிற காட்டொலிவ

மரக்கிளைகளாக புறஜாதிகள் ஏற்றுக்கொள்ளப்படுவது) அவர்களை அங்கீகரித்துக் கொள்ளுதல் எண்ணவாயிக்கும், மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்குமல்லவோ ? – ரோமர்11:15.

இங்கு மரித்தோரிலிருந்து உயிரடைவதைப் பற்றின மற்றுமொரு வேத போதனையான உபதேசத்தை நாம் பெற்றிருக்கிறோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது, தீர்க்கதரிசிகள் மற்றும் வேறுசிலரிடம் வாக்களிக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டியதாயிருக்கிறது. அந்த தேசத்தை, குறிப்பிட்ட காலத்திற்கு தேவன் சிதறடித்தாலும் அவரது வாக்குத்தத்தப்படி, அவர்களுடைய சிட்சையின் காலம், அதாவது "ஏழத்தனையான காலங்கள்"முடிவடைந்தபின்பு அவர்களை அவர் மீண்டும் கூட்டிச்சேர்ப்பார்(வேதாகமப் பாடங்கள், தொகுதி 2–அத்தியாயம் 4ஐ பார்க்கவும்) . இந்த சிந்தையை விரிவுபடுத்துவோமானால், ஆபிரகாமினிடத்தில் தேவன் செய்த வாக்குத்தத்தத்தின்படி அவருடைய பரலோக மற்றும் பூலோக சந்ததியின் மூலமாக, அதாவது வானத்தின் நட்சத்திரம் போன்ற வகுப்பார் மற்றும் பூமியின் கடற்கரை மணல்போன்ற வகுப்பார் முழுமையடைவதன் மூலமாக, பூமியின் அனைத்து தேசங்களும் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்பதைக் காண்கிறோம்(ஆதி22:15–18). இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலானது கல்லறையிலிருந்து முழு மனுக்குலத்தையும் எழுப்புவதை அவசியமாக்குகிறது. இவ்வாறு தம்முடைய மனித சிருஷ்டிகளுக்கான தேவனுடைய உதாரகுணத்தின் அற்புதமான ஏற்பாடு, தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும், அதாவது உயிரோடிருக்கிறவர்களும் மரித்தவர்களுமாகிய அனைத்து மனித குடும்பத்திற்கும் விரைவில் வெளிப்படுத்தப்படும்.

**முதற்பலன் மற்றும் பிந்தைய பலன் அனைத்தும் பரிசுத்தமானவை**

16ம் வசனத்தில் அப்போஸ்தலர் காண்பிக்கிறதுபோல, ஆபிரகாமின் உடன்படிக்கையாகிய வேரிலிருந்து முளைத்தெழும்பிவரும் இந்த பெரிய ஒலிவமரத்தின் முதற்கனியானது பரிசுத்தமாயிருக்கிறதுபோல, அனைத்து பலன்களாகிய கனிகளும் பரிசுத்தமானவைகளே. ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தமானது நேரடியாக அவருடைய பூமிக்குரிய சந்ததிக்கு கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், முடிவை ஆரம்பத்திலேயே தேவன் அறிந்திருக்கிறபடியால், இந்த வாக்குத்தத்தத்தின் முதற்கனியானது ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாக, தலையும் சரீரமுமான முழு கிறிஸ்துவாக இருக்கும் என அறிந்திருந்தார். ஆயினும் இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் நடைபெற்றுவருகிற – அநேக சுபாவக்கிளைகள் வெட்டப்பட்டு, அவ்விடத்தில் காட்டொலிவக்கிளைகள் ஒட்டப்பட்டு வருவது, தேவனுடைய மாபெரும் திட்டத்தின் ஒரு எல்லையாக இருக்காது. ஒரு பரிசுத்த சந்ததியைப் பெறுவதே அவருடைய நோக்கமாயிருந்தது, ஆபிரகாம் முதலாவதாக பரீட்சிக்கப்பட்டார். மேலும் இந்த சந்ததியாக கட்டியெழுப்பப்படவேண்டிய அனைவரும் இதேவிதமாக பரீட்சிக்கப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் இவர்கள் யேகோவா தேவனுடைய கரங்களில் அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றும் முகவர்களாக பயன்படுத்தப்பட வேண்டும்.

முதற் பலன்களாகிய இந்த வகுப்பார் பரிசுத்தமாயிருக்கிறது போல "பிசைந்த மா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்" (ரோமர் 11:16) என அப்போஸ்தலர் கூறுகிறார். இங்கு பிசைந்த மா என்ற வார்த்தையானது, அவர் ஜனங்களைப் பற்றி பேசுவதால், ஜனக்கூட்டம் அல்லது திரளானோர் என மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் சிறப்பாயிருந்திருக்கும். ஆபிரகாமினிடத்தில் ஆணை மூலம் அவர் உறுதிசெய்த உடன்படிக்கையானது, அதாவது யேகோவா தேவனின் உடன்படிக்கையாகிய வேரானது பரிசுத்தமாயிருக்கிறது. ஆகவே இந்த வேருடன் இணைந்திருக்கும் அனைவரும் அதிலிருந்து தங்கள் வாழ்க்கையையும், தங்கள் சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் பெறுகிற அனைவரும்கூட பரிசுத்தமாயிருப்பார்கள்.

ஆபிரகாம் அடையாளமாக யேகோவா தேவனை குறிக்கிறார். ஈசாக்கு குமாரனாகிய நம் கர்த்தராகிய இயேசுவை குறிக்கிறார். ஈசாக்கின் மனைவியாகிய ரெபேக்காள் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய அவருடைய சரீர அங்கங்களை குறிக்கிறார். பிதா, குமாரன், மணவாட்டியாகிய இவர்கள் அனைவரும் பரிசுத்தமான பூமிக்குரிய இஸ்ரயேலரை கொண்டுவருவர். இறுதியில் புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் வரவிருக்கிற அனைத்து மனுக்குலத்தையும் இது உள்ளடக்கியிருக்கும். எனவே இஸ்ரயேல் மீட்டெடுக்கப்படுவதுடன் தேவனோடு இணக்கமாக திரும்பும் ஆதாமின் சந்ததியார் அனைவரும், "பரிசுத்த பிசைந்த மாவாக அல்லது ஜனக்கூட்டமாக, அதாவது முதற்கனிகளைத் தொடர்ந்துவரும் பிந்தைய கனிகளாக இருப்பர்.

தேவதிட்டத்தின் ஆழமான செயல்பாடுகளை இவ்வாறு பார்க்கும்போது, அந்த வெளிச்சத்தில் எதிர்காலம் பற்றியும், கடந்தகாலம் பற்றியும் சொல்வது எத்துணைஅற்புதமானது. ஆ, தேவனுடைய ஞானம் மற்றும் அறிவின் ஆழம் எத்தனை ஐஸ்வரியமானது! அவர் தமது திட்டங்களில் எதை நமக்கு வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ, அதைத்தவிர அவருடைய எல்லா செயல்பாடுகளையும் கண்டறிய முற்படுவது எத்தனை உபயோகமற்ற செயல்! அவருடைய ஆவியினால் நாம் பிரகாசிப்பிக்கப்பட்டிருந்தாலொழிய அவருடைய செயல்களனைத்தும் நமக்கு இரகசியமானவைகளாக இருக்கும். மனித புரிதலுக்கு அப்பாற்பட்ட இந்த இரக்கமுள்ள திட்டத்தை யாரால் அறியமுடியும்? இவ்விதமான திட்டத்தை ஏற்படுத்த கர்த்தருக்கு யார் உதவியிருக்கக்கூடும்? நம்மால் கூடுமா? இது மனித ஞானமல்ல. தேவன் ஒருவரே இதனுடைய காரணகர்த்தாவாக இருக்கமுடியும். இந்த வாக்குத்தத்தத்தின் முதன்மையான ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொள்ளும் பொருட்டு, புறஜாதியார் ஒட்டவைக்கப்படுவதை எந்த யூதனும் ஒருபோதும் திட்டமிட்டிருக்க முடியாது. ஒரு புறஜாதி உண்மையான அடிமரத்தையும், அதன் கிளைகளாகிய யூதர்களையும் ஒட்டப்பட்ட கிளையாக தங்களையும் ஏற்படுத்தியிருக்க ஒருபோதும் முடியாது. இந்தத் திட்டம் தெளிவாக தேவனுடையது. மேலும் இது அவருடைய நன்மைத்தன்மையையும், நீதியின் வீரியத்தையும் சிறப்பாக எடுத்துரைக்கிறது. திட்டங்கள் அனைத்தும் அவருடையதே. அவருடைய வல்லமையினாலே இவையனைத்தும் வெற்றியடையும், அவருக்கே சதாகாலமும் மகிமை உண்டாவதாக.

---------